செ. கணேசலிங்கன்

# மான்விழிக்குக் கடிதங்கள்



பரதன் பதிப்பகம்
63, தையப்பன் தெரு,
சென்னை-600 001.

அளிக்கும்

செ. கணேசலிங்கன்

அவர்களின்

# மான்விழிக்குக் கடிதங்கள்

முதல் பதிப்பு : ஜனவரி 1985

விலை ரூ 5-50

அச்சிட்டோர் :
அகத்தியர் அச்சுக்கூடம்
சென்னை-600 017.

என் எழுத்துக்களுக்கு
என்றும் மதிப்பளித்து,
தொடர்ந்து ஆர்வமூட்டிவரும்
இனிய நண்பர்

இராசாமணி

அவர்கட்கு
என் காணிக்கை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | சமூக வர்க்கங்கள், நவகாலனி | 5 |
| 1, | வகுப்பும் வர்க்கமும் | 17 |
| 2. | பாட்டாளிகள் | 21 |
| 3. | கூலி விவாயி | 25 |
| 4 | ஏழை விவசாயி | 29 |
| 5. | நடுத்தர விவசாயி | 32 |
| 6. | பணக்கார விவசாயி | 36 |
| 7. | நிலப்பிரபுக்கள் | 40 |
| 8. | பாட்டாளிகள் | 43 |
| 9. | தேசிய முதலாளிகள் | 47 |
| 10. | தரகு முதலாளிகள் | 51 |
| 11. | சிறுபண்ட உற்பத்தியாளர் | 55 |
| 12. | வேலையற்றவர்கள் | 58 |
| 13. | மாணவர்கள் | 61 |
| 14. | உதிரிப் பாட்டாளிகள் | 64 |
| 15, | அறிவு ஜீவிகள் | 67 |
| 16. | காலனி, அரைக்காலனி, நவகாலனி | 70 |
| 17. | புதிய ஜனநாயகப் புரட்சி | 74 |

முன்னுரை

# சமுக வர்க்கங்கள், நவகானித்துவம் பற்றிய சில குறிப்புகள்

இன்று நாம் வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்துகொண் டிருக்கிறோம். இவ் உண்மையைப் பெரும்பாலானோர் அறிவதில்லை; உணர்வதில்லை.

சமுக வர்க்கங்களை (Social Classes) எவ்வாறு பகுப்பது? பள்ளிகளில், கல்லூரிகளில் தானும் இவற்றைக் கற்பிப்ப தில்லை.

உற்பத்திக் கருவிகளை வளர்த்தெடுத்த ஒரு கால கட்டத்தில் மனித இனத்தால் உபரியாக உற்பத்தி செய்ய முடிந்தது. இக்கால கட்டத்திலேதான் மனித இனம் அநீதி யான, சமத்துவமற்ற, கொடுமையான ஒரு சமுக அமைப்புள் நுழைய நேரிட்டது. அதுவே வர்க்க சமுதாயம்; சிக்கலான சமுக அமைப்பு. இன்று 3,500 ஆண்டுகளுக்கு மேலாகியும் இச் சமனற்ற சமுக அமைப்பிலிருந்து மனித இனம் விடுதலை பெற முடியவில்லை.

வர்க்க சமுகத்தில் சிறுபான்மையினரான ஒரு பகுதி மக்கள் உற்பத்திச் சாதனங்களை ஆக்கிரமித்துக் கொண் டனர். பெரும்பான்மையினரான மக்கள் உயிர் வாழ்வ தற்காக அவர்களுடன் உறவு ஏற்படுத்தி, அவர்கள் ஆணை யிட்டபடி உழைத்துத்தர நேரிட்டது. உற்பத்தியில் ஒரு பங்கு மட்டுமே இவர்களுக்குக் கிடைத்தது. அச் சிறு பங்கைக்கொண்டு தம் வயிற்றை நிரப்பி வாழ்வது மட்டு

மல்ல திருமணம்செய்து, குழந்தைகளைப்பெற்று, வளர்த்து, மீண்டும் அவர்களுக்கே இலாபம் உழைக்க அனுப்ப நேரிடுகிறது.

உற்பத்திச் சாதனங்களை ஆக்கிரமித்தவர்கள் உழைப்பில் ஈடுபடாது மேலும் மேலும் ஆதிக்கம்பெற்று வளர்ந்தனர். மேலும் இவர்கள், இக்கூலி உழைப்பாளரை அடக்கி ஒடுக்க அரசு என்ற வன்முறை அமைப்பையும் ஏற்படுத்திக் கொண்டனர்,

ஒடுக்கப்பட்ட மக்களின் உபரிக் குவிப்பு உற்பத்திக் கருவிகளை முன்னேறச் செய்தது. அதன் காரணமாக யந்திர உற்பத்தி ஏற்பட்டது, யந்திர உற்பத்தி பண்ட உற்பத்தியைப் பெருக்கியது. யந்திர உற்பத்தியில் ஈடுபட்டவர், நிலத்தை உற்பத்திச் சாதனமாக வைத்து, மக்களை அடிமைப் படுத்திய வரிலும் பார்க்க ஆதிக்கம் பெற்றனர். இவர்களையே முதலாளிகள் என்கிறோம்.

இப்பெரிய சமுக மாற்றம்தானும் கரங்களையே நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலையை மாற்றிவிடவில்லை; முன்பு நிலக் கூலிக்கு அடிமைப்பட்டவர் அடுத்து பணக் கூலிக்கு அடிமையாயினர்.

ஆயினும், இன்று நிலவும் இந்நிலை சமுகத்தில் வாழும் மக்களை பல்வேறு பெரிய குழுக்களாகப் பிரித்துவைத்துள்ளது உற்பத்திச் சாதனங்களைக் கொண்டவர்களிடை பல தரம்; இருகரங்களை மட்டும்கொண்டு உழைப்பவர்கள் பலதரம்: உழைப்பில் ஈடுபட முடியாதவர் சிலதரம். இவர்களையெல்லாம் 'சமுக வர்க்கங்கள்' என்ற அடிப்படையில், விஞ்ஞான அடிப்படையில், தரம் பிரித்துக் காண்பதே இச்சிறு நூலின் நோக்கமாகும்.

வர்க்கத்திற்கு லெனின் கூறிய இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டே வர்க்கங்கள் ஆராயப்பட்டுள்ளன. உற்பத்தியில் ஏற்படும் உறவு, உற்பத்தியில் கிடைக்கும் பங்கு

என்பவையும் உற்பத்தி உறவால் ஏற்படும் வர்க்க குணாம்சமும் எளிமையான முறையில் ஆராயப்பட்டுள்ளது.

வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது; ஆகவே உற்பத்தியில் ஏற்படும் உறவு, உழைப்பில் அவர்கட்குக் கிடைக்கும் பங்கைக்கொண்ட வாழ்வின் அமைப்பு ஆகியவை அவரவர் சிந்தனையைத் தீர்மானிக்கிறது. சமூகம் பற்றிய உறுதியான குணாம்சங்களையும் ஏற்படுத்துகிறது. இந்த ஆய்வுமுறை மார்க்சிய கோட்பாட்டைச் சார்ந்தது.

மார்க்சிய கோட்பாடு என்பது இரு அம்சங்களைக் கொண்டது: வரலாற்றை பொருள் முதல்வாத அடிப்படையில், உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியோடு ஆராயும் வரலாற்றுப் பொருள் முதல்வாதம். அடுத்தது, உலகத்திற்கு விளக்கம் கூறுவதைவிட்டு உலகத்தை மாற்றி அமைக்கும் சித்தாந்தத்தைக் கொண்ட இயக்கவியல் பொருள் முதல்வாதம்.

உலகத்தை மாற்றியமைக்கக் கூடியவர் உழைக்கும் மக்களே. இதுவரை மாற்றமடைந்துவந்த உலகத்தை சிருஷ்டித்தவர்களும் அவர்களே. இனி மேலும் புதுமையான வியக்கத்தக்க புதிய உலகை ஆக்கப் போகின்றவர்களும் அவர்களே.

இத்தகைய உழைக்கும் மக்கள் வளமாக வாழமுடியாது, வேகமாக உலகை மாற்றியமைக்க விடாது, சமூகத்தில் நீதியும் நேர்மையும் சம உரிமையும் அவர்கட்குக் கிட்டாதவாறு ஒரு சில வர்க்கத்தவர் தடுத்து வைத்துக் கொண்டுள்ளனர்; உற்பத்திச் சாதனங்களை தம் ஆதிக்கத்தில் வைத்திருப்பவர்களும் இவர்களே. இவர்கள் உழைப்பில் ஈடுபடாதவர்; சோம்பேறிகள். ஆனால், சகல வசதி வாய்ப்புகளுடனும் வாழ்கின்றனர்,

எவ்வாறு? இதற்காக இருவகைக் கருவிகளை அவர்கள் அமைத்துக்கொண்டனர். ஒன்று: பொலிஸ், இராணுவம்,

நீதிமன்றம், சிறைச்சாலை முதலிய வன்முறைக் கருவிகள்; இதில் வேடிக்கை என்ன வெனில் அடக்கி ஒடுக்கும் மக்களில் ஒரு பகுதியினரைக் கூலிக்கு அமர்த்தியே இப்பலாத்கார வடிவங்களை நடைமுறைப் படுத்துகின்றனர். முதலாளிகள் ஏற்படுத்தும் சட்ட விதிகள், ஒழுங்கு முறைகளை மீறின் இக் கூலிப் படையினர் அடக்கி ஒடுக்குவர்.

மற்றவை வன்முறையற்றவை: தவறான கருத்துகள். உழைப்பவர் சிந்தனையைச் சிறைபிடிக்கும் பொய்மைக் கருத்துகள்: பரம்பரையாக வந்த பல்வேறு கருத்தியல்கள்.

கடமையைச் செய்; சென்ற பிறவியில் செய்த பாவங்களாலேயே கஷ்டப்படுகிறாய்; இப்பிறவியில் அடங்கி உழை: அடுத்த பிறவியில் நீயும் பணக்காரனாகலாம். இன்றைய பாராளுமன்ற தேர்தல் முறைகளை நம்பு; அவற்றின் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்துவிடலாம். குடும்பத்திற்கு அடங்கி நட. அரசின் பத்திரிகை, ரேடியோ, டிவி செய்திகளை நம்பு. சாதி அமைப்பு தவிர்க்க முடியாதது. சட்டங்கள் சமத்துவம் தரும்; நீதிமன்றங்கள் நீதி வழங்கும்; கடவுளே உலகத்தைப் படைத்தார்; நம்பு; வழிபடு; இவ்வாறு ஏராளமான கருத்துகள் இன்றைய சமூக அமைப்பைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டன. இப்பொய்மைக் கருத்துகளைத் தலையில் சுமந்து திரிபவர்களையே சமூகத்தில் பெரும்பாலும் காண்கிறோம்.

இக் கருத்தியல்களைக் காட்டி சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளுக்கு விளக்கம் கூறப்படுகிறது. ஒருவன் மாடிவீட்டில் சுகமாக வாழ மற்று ஒருவன் ஓட்டைக் குடிசையில் வாழ நேரிடுகிறது. ஏன் இந்த முரண்பாடு? முன்னவன் போன பிறவியில் புண்ணியம் செய்தவன்: மற்றவன் பாவம் செய்தவன்!

இத்தகைய தவறான பொய்மைக் கருத்துகளை உழைக்கும் மக்கள் தொடர்ந்து நம்பிக்கொண்டு அடங்கி ஒடுங்கி வாழ்ந்துவிடப் போவதில்லை. அவர்களுக்கு மார்க்ஸ்,

லெனின், மாவோ ஆகியோர் கூறிய கருத்துகளும் அவர்கள் காட்டிய நடைமுறையும் முதலாளித்துவத்தால் தூவப்பட்ட மாசுகளை களைந்து சிந்தனையைத் தெளிவாக்குகின்றன. புரட்சிகர அரசியல் ஒன்றுதான் இதற்கு சரியான வழி காட்டுகிறது.

புரட்சிகர அரசியலை முன் எடுத்துச் செல்ல சமுக வர்க்கங்களை ஆய்வது மிகவும் அவசியமாகிறது. அதன் மூலமே ஆளும் வர்க்கம், அதற்குத் துணை நிற்கும் எதிர் வர்க்கங்களையும் இனங்கண்டு, சொத்து எதுவுமற்று இரு கரங்களை மட்டும் கொண்டு உழைத்து வாழும் பாட்டாளி வர்க்கம் தன் நேச சக்திகளை அணி திரட்டி, தன் போர்த் தந்திரங்களை வகுத்துக் கொள்ள முடியும்: புரட்சி மூலம் உலகை மாற்றி அமைக்க முடியும்.

சமுகத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் ஒரு வர்க்கநிலை உண்டு. அதைக் கணித்துக் கொள்ள, சிறப்பாக, உழைக்கும் வர்க்கத்தவர் தெரிந்திருக்க வேண்டும், அப்பொழுதேதான் எதிரிகளை, எதிர் வர்க்கங்களை இனங்கண்டு கொள்ள முடியும்.

"ஒவ்வொரு வர்க்கத்தின் பின்னேயும் அதன் வர்க்க நலன் இருக்கும்; இதை அறிந்து கொள்ளும்வரை தொழி லாளி வர்க்கம் ஏமாந்து கொண்டேயிருக்கும்" என லெனின் அறிவுறுத்தினார்.

இச்சிறு நூல் மூலம் ஒவ்வொருவரது வர்க்க நிலையையும் கண்டறியும் முறை பற்றிக் கூற முயன்றுள்ளேன். ஆளும் வர்க்கத்தை இனம்காணல், புரட்சிப் போர்த்தந்திரம் பற்றி அரசியற் கட்சிகளிடை அபிப்பிராய பேதமிருக்கலாம். ஆயினும் மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிப்போக்குகளை ஆழ்ந்து, ஆராய்ந்து கற்க வேண்டிய நிலையில் இன்று நாம் உள்ளோம். எத்தகைய அரசியற் கோட்பாடும் நடைமுறை யின் மூலமே நிரூபிக்கப்பட வேண்டும்.

காலனி, அரைக் காலனி, நவகாலனி பற்றிய வேறுபாடு களைப் பலர் அறிந்திருக்கவில்லை. அவற்றையும்

சுருக்கமாக கடைசிப் பகுதியில் கூறியுள்ளேன். ஆயினும் இன்று நவகாலனித்துவம் மூன்றாவது உலக நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. இத்தகைய அமைப்பில் நடைபெறும் புரட்சிகள் பற்றியும் நாம் சிறப்பாகக் கற்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இலங்கையில் நவகாலனி ஆதிக்கம் இன்று ஏற்படுத்தியுள்ள பயங்கர நிலையைக் காண்கிறோம். நவகாலனித்துவம் இனவெறிகொண்ட சர்வாதிகார ஆட்சிக்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளது. பூர்ஷ்வா ஜனநாயக தேர்தல் முறைகள் நிறுத்தப்பட்டு கிட்லர் ஜெர்மனியில் நடாத்தியது போன்று அபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் ஆட்சி நீடிக்கப்பட்டுள்ளது. பத்திரிகைகள், ரேடியோ, டி. வி. போன்ற தொடர்பு சாதனங்கள் யாவும் அரசின் ஊது குழலாக உள்ளன. வேலை நிறுத்தங்கள், பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் யாவும் தடைசெய்யப்பட்டு விட்டன. ஆயுதப் படைகளின் அட்டகாசங்கள் கட்டுக் கடங்காது போய்விட்டன. அப்பாவி மக்களையும் சுட்டு விட்டு எரித்துவிடத்தக்க அதிகாரத்தை இராணுவம் பெற்றுள்ளது; இதை இராணுவத்தினர் நடைமுறைப் படுத்திக் கொண்டுள்ளனர்.

அதே வேளை, இக்கொடூர இனவாத பாசிச நிலையை எதிர்த்து, தொழிலாளர், விவசாயிகள், மீனவர்களுடன் இதே குடும்பங்களைச் சார்ந்த வேலையற்ற இளைஞர்களும் மாணவர்களும் புரட்சிகர அரசியலை முன்வைத்து ஆயுதமேந்தி நவகாலனித்துவத்தை வீழ்த்தப் போராடி வருகின்றனர்.

நவகாலனித்துவம் இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் மூன்றாவது உலக நாடுகளில் வேகமாக வளர்ந்து வரும்,நவீன ஆதிக்க வடிவமாகும்.காலனி நாடுகளுக்கெல்லாம் அரசியலுரிமை வழங்க வேண்டும் என்று குரலெழுப்பிய அமெரிக்காவே நவகாலனி ஆதிக்கத்திற்குத் தலைமை

தாங்குகிறது. மூன்றாவது உலக நாடுகளையெல்லாம் தன் நவகாலனியாக ஆக்கிவருகிறது. இம் முயற்சிக்குப் பயன் படுத்தும் நவீன ஆக்கிரமிப்பு வடிவங்களை இன்றைய இலங்கையை உதாரணமாக முன்வைத்துக் காணலாம்.

(அ) இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் சர்வ தேசக் கம்பனிகள் பிற மூன்றாவது உலக நாடுகள்மீது செய்வது போலவே இலங்கையின் உற்பத்தி, விநியோகத்தில் முதன்மையான ஆதிக்கம் செலுத்துகின்றன. பிரதான உற்பத்தியான தேயிலையை லிப்டன், புரூக்பொண்ஸ் கம்பனிகளே தம் ஆதிக்கத்துள் வைத்துள்ளன. இரசாயனப் பொருட்கள் இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ரீஸ் ஆதிக்கத் திலும் பற்பசை முதல் சலவைப் பவுடர் வரையுள்ள நுகர் பண்டங்கள் லிவர் பிரதேஸ் உற்பத்தியிலும் சிகரெட் அமெரிக்க புகையிலைக் கம்பனியின் ஏகபோகத்திலும் உள்ளன. இவ்வாறு மேலும் பல உள்ளன. கட்டுப்பாடற்ற திறந்த சந்தையையும் சர்வதேசக் கம்பனிகளே ஆக்கிரமித் துள்ளன.

(ஆ) யந்திர உற்பத்தி மூலதனத்திலும் பார்க்க நிதி மூலதனம் அதிக ஆதிக்கம் மிக்கது என்பதை அனைவரும் அறிவர். அமெரிக்க ஏகாதிபத்தியம் நவகாலனிகளை உருவாக்குவதற்காகவே ஏற்படுத்திய உலக வங்கி இலங்கையை இன்று ஆட்சி புரியும் அளவிற்கு அரசுக்குக் கடன் வழங்கியுள்ளது. இன்று இலங்கையின் வரவு செலவுத் திட்டம், அமெரிக்க டாலரின் விலை யாவையும் உலக வங்கியே தீர்மானிக்கிறது. பல்வேறு திட்டங்களை நடாத்த இவ்வங்கியும் அமெரிக்காவும் கடன் வழங்கியுள்ளன. அதே வேளை உலக வங்கியின் சிபார்சில் பிற அமெரிக்கச் சார்பான முதலாளித்துவ நாடுகளும் திட்டக் கடன்கள் வழங்கி வருகின்றன.

(இ) இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னரே மூன்றாவது உலக நாடுகளிலும் அரச முதலாளித்துவம்

வளரத் தொடங்கியது. இலங்கையிலும் இறக்குமதிப் பதிலீடான பல உற்பத்திகள், போக்குவரத்து, இறக்குமதி செய்தும் உள் நாட்டிலும் வாங்கி விற்கும் வாணிபம் போன்ற தொழில்கள் ஆகியவற்றை, கூட்டுத்தாபனங்களை அமைத்து அரசு நடாத்துகிறது. இவை யாவும் பெரும்பாலும் நட்டத்லேயே இயங்குகின்றன, இத்தொழிற் பாடுகளைக் காட்டியும் உலக வங்கியில் அரசு கடன்பெற முடிந்தது.

(ஈ) மூன்றாவது உலக நாடுகளிலிருந்து மூலப்பொருட்களை ஏகாதிபத்தியங்கள் மலிவாக வாங்கிச் சென்று யந்திரப் பண்டங்களாக்கி அதே நாடுகளுக்கு விற்கும் காலனி நிலை இன்று பெரிய மாற்றம் பெற்றுவிட்டது. நவ காலனித்துவத்தில் மூலப் பொருளும் மலிவான உழைப்புச் சக்தியும் கிடைக்கும் நாடுகளில் ஏகாதிபத்திய நாட்டுக் கம்பனிகள் தாமே யந்திரங்களை நிறுவி நேரடி உற்பத்தியில் ஈடுபடுகின்றன. இக்கம்பனிகள் உள்நாட்டில் வேலை வாய்ப்பு வழங்குவதாகவும் இறக்குமதிப் பதிலீடு உற்பத்தியுடன் (import Substitution) பெரும் பகுதியை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியில் உதவுவதாகவும் நுழைகின்றன. இவ் ஏகாதிபத்தியக் கம்பனிகள் உள்நாட்டு அரசிடம் பல சலுகைகளைப் பெறுகின்றன. மலிவான போக்குவரத்து, மின்சாரம், டெலிபோன், தெருக்கள், வரிச் சலுகைகள் போன்ற பல வசதிகளைப் பெறுகின்றன. உள்நாட்டில் கிடைக்கும் மலிந்த உழைப்போடு ஏகாதிபத்திய நாடுகளில் சுற்றாடல் பிரச்சனையுள்ள உற்பத்திகளையும் மூன்றாம் உலக நாடுகளில் நடாத்துகின்றன. இரசாயன உரம், பிளாஸ்டிக், தோல் பதனிடும் தொழில், கிருமிநாசினி போன்றவையும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. சென்ற ஆண்டு டிசம்பரில் போபாலில் நடைபெற்ற விஷவாயுக் கொலையில் 2500 க்கு மேற்பட்டவர்கள் இரு நாட்களில் இறந்த செய்தி உலகு அறிந்ததே. இலங்கையில் 1968-ல் அன்றைய உலகவங்கித் தலைவன் மக்னமாரா ஆரம்பித்த பசுமைப்புரட்சியின் பின் 1983 வரை 10,000 பேர் வரை கிருமி நாசினியால் இறந்துள்ளனர் என கணக்கிடப்

பட்டுள்ளது. 15 ஆண்டுகளாக அவ்வப்போது நடைபெற்ற தனால் இம்மரணங்கள் பெரிது படுத்தப்படவில்லை.

(உ) கொழும்பிற்கு அண்மையிலுள்ள கட்டுநாயகாவில் உள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் 250 க்கு மேற்பட்ட முதலாளித்துவ நாட்டுக் கம்பனிகளின் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. பெரும்பாலானவை ஆடை தைக்கும் கம்பனிகளே. உலகிலேயே மிக மலிவாக இலங்கைப் பெண்களின் உழைப்பை இக்கம்பனிகள் ஏற்றுமதி செய்து இலாபம் குவிக்கின்றன. இப்பகுதியில் தொழிற்சங்க உரிமை, வேலை நிறுத்தம், ஆர்ப்பாட்டம் எதற்கும் அனுமதி கிடையாது.

ஏகாதிபத்திய நாட்டவர் தமது விடுமுறையைக் கழிக்க வேண்டிய ஐந்து நட்சத்திர ஓட்டல்களையும் மூன்றாம் உலக நாடுகளில் சர்வதேசக் கம்பனிகளே நடாத்துகின்றன. 1977ன் பின்னர் வேகமாக நவகாலனியாகிய பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பெரிய மாற்றங்கள் ஐந்து நட்சத்திர ஓட்டல்களின் கட்டடங்களேயாகும். மேல் நாட்டவருடைய பொழுது போக்கு,சுவையான உணவு ,வசதிகள் யாவும் இங்கு மலிவாகக் கிடைக்கின்றன. இந்த ஓட்டல்களில் ஏகாதிபத்திய கலாச்சாரங்களின் சிறப்பான நிலைகளைக் காணலாம். டிஸ்கோ, ஸ்ரிப்ஸி நடனங்கள், மதுக்கடைகள், விபச்சாரம் இங்கு தாராளமாக விற்பனையாகின்றன. சிங்கள பௌத்தர்கள் இத்தகைய கலாச்சாரச் சீரழிவைத்தடுக்க முடியாதவர்களாக உள்ளனர்.

(ஊ) ஏகாதிபத்திய நாடுகள் ஏகபோக அரச முதலாளித்துவத்தை தம் நாடுகளிலும் இரண்டாம் உலக நாடுகளிலும் வளர்த்து வருகின்றன. இதனாலேயே இப்பெரும் மூலதனத்தைக்கொண்டு மறைமுகமாக மூன்றாம் உலக நாடுகளை அடிமைப்படுத்த முடிகிறது. அதன் பின்னர் அந்நாடுகளுக்கு யந்திரப் பண்டங்களையும் ஆயுதங்களையும் தாம் தீர்மானிக்கும் விலையில் விற்க முடிகிறது. அத்தோடு அந்நாட்டவரது விவசாய, உற்பத்திப் பண்டங்களையும் மலிவான விலையில்

வாங்கமுடிகிறது இச்சமச் சீரற்ற பரிமாற்றம் மூன்றும் உலக நாடுகளை ஒட்டாண்டிகளாக்கி, மேலும் அடிமைப் படுத்துகிறது. இலங்கை இவ்வலையில் சிக்குண்டு மீளமுடியாது தவிக்கிறது, ஆளும் வர்க்கம் இன வெறியையும் பாசிச சர்வாதிகாரத்தையும் நிலைநாட்டியே ஆளமுடிகிறது. இத்தகைய ஆட்சிக்கு வேண்டிய ஆயுதங்கள், ஆலோசனைகளையும் அமெரிக்கா நேரடியாகவும் மறைமுகமாகவும் தந்து உதவுகிறது.

நவகாலனியில் புரட்சிப் போராட்டம் எவ்வடிவம் எடுக்கும் என்பது தனியாக ஆராயப்பட வேண்டியதாகும். இத்தகைய அமைப்பில் அண்மையில் புரட்சியில் வெற்றிகண்ட முதல் நாடு நிக்கராகுவா. அடுத்து, சென்ற நாலு ஆண்டுகளாக தளப்பிரதேசம் அமைத்து நீண்டகாலப் புரட்சி யுத்தத்தைத் திட்டமிட்டு நடாத்தும் எல் சல்வடோர். மார்க்சிய - லெனினிசக் கட்சிகளே இங்கும் ஆயுதப்புரட்சிக்குத் தலைமை தாங்குகின்றன. ஏகாதிபத்தியத்திற்குத் தலைமை தாங்கும் அமெரிக்காவிற்கு அண்மையிலேயே இப்புரட்சிகள் நடைபெறுவது மக்கள் யுத்தத்தின் மகத்தான சக்தியை எடுத்துக் காட்டுகிறது. தொழிலாளர், விவசாயிகள், இளைஞர்கள் இப்புரட்சி யுத்தத்தை நடாத்துகின்றனர். கத்தோலிக்க தேவாலயங்கள் இப்புரட்சிகளுக்கு ஆதரவு வழங்குவது மற்றொரு வியப்பாகும். இப்புரட்சிகள் பற்றி இங்கு ஆராய்வது என் நோக்கமல்ல. ஆனால், ஏகாதிபத்திய மூலதனங்கள் ஊடுருவி நவகாலனியாக மாறிவரும் மூன்றாம் உலக நாடுகளில் புரட்சிப் போராட்டங்கள் எடுக்கக்கூடிய புதிய வடிவங்களை எம் நாட்டுப் புரட்சிகரக் கட்சிகள் கற்க வேண்டும். இலங்கையின் புரட்சிகர வர்க்கங்கள் சார்ந்த இளைஞர்களால் நடாத்தப்படும் தற்போதைய தற்காப்புக் கொரில்லாப் போராட்டம் வெறும் தேசிய விடுதலைப்

போராட்டம் மட்டுமல்ல, நவகாலனித்துவத்தால் ஆக்கிர மிக்கப்பட்டு அல்லலுறும் சிங்கள மக்களுக்கும் விடுதலையும் புது வாழ்வும் தரும் போராட்டமுமாகும். தற்போதைய தற்காப்புப் போராட்டம் ஏகாதிபத்தியங்களை நாட்டி லிருந்து விரட்டும் நீண்டகால விடுதலைப் போராட்டமாக வடிவமெடுக்கும் என்பது உறுதி. பிலிப்பையின்ஸ், இந்தொனேசியா போன்ற நவகாலனி நாடுகளிலும், விடுதலைப் போராட்டங்கள் வெற்றியெற்று வருகின்றன.

சமூக வர்க்கங்களை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நல்ல நோக்கமாகவே பள்ளியில் படிக்கும் என் மகளை நினைவில் வைத்து கடித முறையில் இச் சிறு நூலை அமைத்தேன், சமூக வர்க்கங்கள்பற்றி தமிழில் வெளி வரும் முதலாவது நூல் இதுவே. மேலும், 'குந்தவிக்குக்கடிதங் கள், குமரனுக்குக் கடிதங்கள்', ஆகிய என் முன்னைய கடித நூல்கள்பெற்ற வரவேற்பு இந்நூலையும் அதே முறையில் எழுதத் தூண்டியது. அத்தோடு, இம்மூன்று நூல்களும் மார்க்சிய ஆரம்ப அறிவை அனைவருக்கும் தரும் என்ற நம்பிக்கை; முன் குறிப்பிட்ட இரண்டு சிறு நூல்களையும் கற்றவர்கட்கு இந்நூல் சமூக விஞ்ஞானத்தை மேலும் ஆர்வமாகக் கற்கத் துணைபுரியும் என்றும் எண்ணுகிறேன் இச்சிறு நூல் அவற்றின் தொடர்ச்சியே. பல சொற்களின், விளக்கங்களை அந்நூல்களைக் கற்பதன் மூலம் மேலும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

உபரி என இந்நூலில்வரும் வார்த்தை உபரிமதிப்பையே குறிக்கும் ஆங்கில மொழியிலும் 'உபரி மதிப்பு' என்பதை 'உபரி' என சுருக்கிக் கூறிவிடுகின்றனர். மேலும் 'உபரி மதிப்பு' என்றசொல் மார்க்சிய ஆரம்ப அறிவு உள்ளவர் களுக்கு மயக்கமேற்படுத்தி விடலாம் எனவும் எண்ணித் தவிர்த்தேன்.

எழுத்துப் பிரதியைப் படித்து திருத்தங்கள், ஆலோசனை கள் வழங்கிய தோழர்களுக்கு என் அன்பும் நன்றியும் உரித் தாகும். விரைவில் அச்சிட்டுதவிய நண்பர் சீதாராமன், அச்சகத் தொழிலாளர்கட்கும் என் நன்றி. அட்டையை அழகுற வரைந்துதவிய இனிய நண்பர் மணியம் செல்வனுக் கும் என் அன்பு,

சென்னை
31-1-85

**செ. கணேசலிங்கன்**

# 1. வகுப்பும் வர்க்கமும்

அன்பு மகள் மான்விழிக்கு,

குந்தவி அக்காவிற்கு எழுதிய கடிதங்களைப் படித்தேன்; அடிக்கடி வர்க்கம், வர்க்கப் போரராட்டம் என அதில் எழுதி யிருந்தீர்கள். உயர்தர வகுப்பினர், மத்தியதர வகுப்பினர், கீழ்தட்டு வகுப்பினர் எனவே பாடசாலையில் ஆசிரியர் பிரித்துக் கூறுவார். அந்த வகுப்பிற்கும் நீங்கள் கூறும் வர்க்கத்துக்கும் என்ன வேறுபாடு?

உன் கடிதத்தில் நீ எழுப்பிய வினாவைப் படித்து வியந்தேன். இவற்றையெல்லாம் விவரமாக அறிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டது மகிழ்ச்சியே.

வகுப்பு என்பது நாம் சாதாரணமாக வழங்கும் சொல், பாடசாலையில் கல்வி கற்கும் ஆண்டையொட்டி மாணவர்களைப் பல்வேறு வகுப்புகளாகப் பிரிக்கவில்லையா? அது போலவே அவரவர் வருமானத்தைக்கொண்டு உயர் தரம், நடுத்தரம், கீழ் மட்டம் என சமுதாயத்தில் பிரித்துப் பேசுகின்றனர். அதையே ஆசிரியரும் கூறியிருப்பார்.

ஆனால் உயர், மத்தியதரம், கீழ் வகுப்புகளாகப் பிரிப்பது கற்பனா ரீதியானது. விஞ்ஞான பூர்வ முறை யன்று. ஒருவரது சொத்து, வருமானத்தை வைத்துக் கொண்டு அவரது குணாம்சங்களை முற்று முழுதாகக் கூறிவிட முடியாது. மேலும் இம்மூன்று பிரிவுகளுள் சமுக மக்கள் அனைவரையும் அடக்கி விடவும் முடியாது. சிலர் உயர்தர வகுப்பினரை மேல் உயர்தரம், கீழ் உயர்தரம் எனவும் மத்தியதர வகுப்பினரை மத்தியதரம், கீழ் மத்தியதரம் எனவும் பிரித்துப் பேசுகின்றனர். இவையெல்லாம் குணாம் சங்களை ஆழ்ந்து ஆராயும் முறையல்ல.

மா.—2

வர்க்கம் என்பதை விஞ்ஞான பூர்வமான சொல்லாகவே நாம் பயன்படுத்துகிறோம். வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது என்ற பொருள் முதல்வாதக் கோட்பாட்டை, நீயும் குமரனுக்கு எழுதிய கடிதத்திலும் படித்திருப்பாய்.

ஒவ்வொருவரும் தாம் உயிர்வாழ்வதற்காக ஏதோ ஒரு தொழிலில், உற்பத்தியில் ஈடுபட வேண்டியுள்ளது, உற்பத்திச் சாதனங்களுடன் (நிலம், நீர், மூலதனம்) அவர்களுக்கு ஏற்படும் உறவு, அதில் கிடைக்கும் பங்கு ஆகியவற்றை வைத்து வர்க்கங்களாகப் பிரித்துப் பார்ப்பதே விஞ்ஞான பூர்வமுறையாகும்.

இவ்வாறு பிரிக்கும்போது பெரிய சமூகக் குழுக்களாக மக்களை நாம் வகுப்பது மட்டுமன்றி அக்குழுக்களிடையே உள்ள சமூக முரண்பாடுகளையும் நாம் காணமுடியும்; சமூக வளர்ச்சியில் ஒவ்வொரு வர்க்கம் ஆற்றும் பங்களிப்பையும் அறிய முடியும். உழைக்கும் வர்க்கங்களையும் வியர்வை சிந்தாது வாழும் மக்களையும் கண்டறிய முடியும். இவற்றுக்கும் மேலாக சமூக மாற்றத்தை, சமூகப் புரட்சியை ஏற்படுத்தக்கூடிய வர்க்கங்களின் நிலைகளையும் எளிதில் காண முடியும்.

ஓரளவு குழப்பமாக இருக்கிறதா? சில வர்க்கங்களை நாம் எடுத்து ஆராயத் தொடங்கியதும் உன் மயக்கம் தெளிவாகிவிடும்.

இப்பொழுது நீ கிராமப்புறத்தில் வசிப்பதால் சுற்றிவர உள்ள தோட்டங்களில், வயல்களில் வேலை செய்பவர்களைப் பார்த்திருப்பாய். சித்தப்பாவின் தோட்டத்திற்கும் போயிருப்பாய். அங்கு நிலத்தைக் கொத்துபவர், பாத்தி கட்டுபவர், வாய்க்காலில்வரும் நீரை சிறு பாத்திகளுக்கு பாய்ச்சுபவர், வெங்காயம் கிழங்கை நடுவோர், கிண்டி எடுப்போர், மிளகாய் பறிப்போர் ஆக பலவித வேலை செய்வோரைக் கண்டிருப்பாய்.

நெல் விளையும் வயலாயின் உழுவோர், நாற்றுநடுவோர், களை பிடுங்குவோர், அறுவடை செய்வோர் ஆகியவர்களைப் பார்க்கலாம்.

இவர்களெல்லோரும் குறிப்பிட்ட நேரம்வரை உழைத்துவிட்டு மாலையில் கூலிபெற்றுச் செல்வர். துண்டுபட்ட நிலங்களில் இவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்காது. அதனால் மறுநாள் வேறு இடத்தில் உழைக்க நேரிடும். போதிய நிலமுள்ளவர்கள் ஒரு சிலரை மட்டும் நிரந்தரமாக வேலையில் ஈடுபடுத்துவர். பின் உழவு, விதைப்பு, களை எடுத்தல், அறுவடை காலங்களில் தேவையையொட்டி மேலதிக கூலி உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர்.

இவ்வாறு விவசாயக் கூலியாக உழைப்பவர்களது வறுமை என்றும் விடிவதில்லை. அறுவடை, விதைப்பு, களை எடுக்கும் காலங்களில் இவர்களுக்கு வழமையிலும் பார்க்க அதிக கூலி கிடைப்பதாகத் தோன்றலாம். ஆயினும் இவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைப்பதில்லை. ஆண்டுதோறும் 125 நாட்கள் தொடக்கம் 250 நாட்கள் வரையே வேலை கிடைக்கிறது. இக்கூலியை வைத்துக்கொண்டு 365 நாட்களைக் கழிக்க வேண்டியிருக்கிறது. இதனால் நம்நாட்டிலும் இந்தியாவிலும் கூலிவிவசாயிகள் பல நாட்களை அரைப் பட்டினியாகவே கழிக்கின்றனர்; பெரும்பாலும் ஒரு வேளை உணவே உண்ணுகின்றனர். இது பெரிய கொடுமையல்லவா? உனக்கு வியப்பா யிருக்கிறதா?

வறுமைகூட இவ்விவசாயக் கூலிகளுக்கு பழக்கமாகி விடுகிறது. பட்டினியாக வாழநேருவதே வாழ்க்கை என்றாகி விடுகிறது. விதி, தலையெழுத்து, கடவுள் அளந்த அளப்பு என்றெல்லாம் இவர்களுக்கு ஆறுதல் கூறப்படுகிறது.

முற்பிறவிப் பாவபுண்ணியங்களே இப்பிறப்பில் சொத்துள்ள செல்வர்களையும் ஏதுமற்று இருகரங்களால் உழைத்து வாழநேரும் ஏழைகளையும் படைத்துள்ளன என்று சமய

வாதிகள் ஆறுதல் கூறுவர். இப்பிறவியில் ஒழுங்காக அடங்கி வாழ்ந்தால் அடுத்த பிறவியில் நன்மை கிடைக்கும் என்றும் போதிப்பர்.

எம் நாட்டிலும் இந்தியாவிலும் மற்றும் உலகின் பின் தங்கிய நாடுகளிலும் இத்தகைய விவசாயக் கூலிகளே பெரும்பான்மை யினராவர்.

துன்பத்தில் உழலும் இக்கூலி விவசாய மக்களைத் தனி வர்க்கமாகப் பிரிக்கலாம். இவர்கள் எவ்விதச் சொத்து மின்றி கைகளால் உழைத்து வாழ்பவர்கள். இவர்களைச் சீனத் தலைவர் மாவோ கிராமப்புறப் பாட்டாளிகள் என உயர்ந்ததோர் வர்க்கமாகக் கணித்தார். பாட்டாளிகள் என்றால் யார்? எப்படி இந்த வறுமையில் வாடும் விவசாயக் கூலிகளை உயர்ந்த வர்க்கமாகக் கருதினார் என்று கேட்கிறாயா? அவற்றை விரிவாகப் பார்ப்போம்.

அன்பான,
அப்பா

# 2. பாட்டாளிகள்-கூலி அடிமைகள்

அன்பு மானுக்கு,

நீ முன்னர் கீழ்வகுப்பில் படிக்கும்போது எதிர்ச்சொற்கள் பற்றி கூறியது என் நினைவில் வருகிறது. பூனையும் எலியும், கீரியும் பாம்பும், ஒநாயும் ஆட்டுக்குட்டியும்... இவற்றைப் பற்றிய கதைகளைக்கூட அடிக்கடி நீ தூங்கும் வரை நான் கூறவேண்டியிருந்தது.

முதலாளி என்பதற்கு எதிர்ச் சொல்லே பாட்டாளி ஆகும். சிலர் தொழிலாளி என்றும் கூறுவர். ஆயினும் பாட்டாளி என்பதே சரியான சொல்லாகும். முதலாளி, பாட்டாளி என்பன இரண்டு பெரிய வர்க்கங்களாகும். மேலே கூறிய எதிரிகளான பிராணிகளுக்கும் முதலாளி—பாட்டாளி என்ற மனித எதிரிகளுக்குமிடையில் ஒரு பெரிய வேறுபாடு உள்ளது. எலி பூனையிடமும் பாம்பு கீரியிடமும் ஆட்டுக்குட்டி ஒநாயிடமும் தோற்றுக் கொண்டே இருக்கும். ஆனால் பாட்டாளி தோற்கமாட்டான். தன் எதிரியான முதலாளியை ஒரு கட்டத்தில் அழித்துவிடுவான். அது எவ்வாறு நடைபெறும் என்று கேட்கிறாயா? இந்த விசித்திர மான கதையைத்தான் உனக்கு விரிவாகக் கூறப்போகிறேன். அதற்காக முதலில் பல்வேறு வர்க்கங்கள் பற்றி விளைவாக எழுத உள்ளேன்.

மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே யந்திர உற்பத்தி, மேல் நாடுகளில் ஆரம்பமாகியது. இருப்புப் பட்டறை வைத்திருந்த கம்மாளர் போன்றவர்கள், வாணிப வளர்ச்சி ஏற்பட உற்பத்தியைப் பெருக்கினர். வாணிப மூலதனமும் பட்டறை மூலதனத்துடன் இணைந்து அவர்கட்கு ஊக்கம் தந்தது. நீர் வீழ்ச்சி, நீராவி போன்ற சக்திகளைப் பயன் படுத்தி யந்திர உற்பத்தியில் ஈடுபட்டனர். இந்த யந்திரங்

களில் வேலை செய்ய கிராமப்புறங்களிலிருந்து, நிலத்தோடு கட்டுப்பட்டிருந்த மக்கள் வந்து குவிந்தனர்.

யந்திரங்கள் நிறுவப்பட்ட இடங்களை ஒட்டி குடிசை களை எழுப்பி இக் கிராம மக்கள் வாழ்ந்தனர். கட்டுப்பாடு எதுவுமின்றி நாள்தோறும் 12—18 மணி நேரம்வரை யந்திரங்களில் உழைத்தனர். இவர்களுக்குக் கூலி மட்டும் வழங்கப்பட்டது. யந்திர நிலையங்களைச் சார்ந்து நகரங்கள் வளரத்தொடங்கின.

இத்திடீர் மாற்றத்தைக் கண்டு பல சமுக விஞ்ஞான அறிஞர்கள் ஆராயத் தொடங்கினர்.

பண்ணையடிமை நிலையிலிருந்த கிராம மக்கள் கூலி அடிமை நிலைக்கு மாறுவதைக் கண்டனர். நிலப்பிரபுக் களிலும் பார்க்க யந்திர உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட கம்மாளரும் பிறரும் செல்வந்தராகவும் ஆதிக்கம் மிக்கவராக வும் சமுகத்தில் வளரத் தொடங்கினர். நிலப்பிரபுக்களின். ஆதிக்கம் சிறிது சிறிதாக வீழ்ச்சியடைந்தது. யந்திர உற்பத்திச் சாதனங்களைக் கொண்டு கிராமங்களிலிருந்து வந்தமக்களுடைய உழைப்பைக் கூலிக்கு வாங்குபவர்களையே முதலாளிகள் என்றனர். எவ்வித உற்பத்திக் கருவிகளும் இல்லாதவர்கள், தமது கரங்களாலும் உடலாலும் முதலாளி களின் கூலிக்காக உழைப்பவர்களையே பாட்டாளிகள் எனக் கூறினர்.

பாட்டாளிகள் என்ற வார்த்தையை நாம் விஞ்ஞான பூர்வமான சொல்லாகவே பயன்படுத்துகிறோம். பாட்டாளி என்பவன் மூன்று குணாம்சங்களைக் கொண்ட வர்க்கத்தவன் எதிர்கால சமத்துவ உலகத்தைக் கட்டி எழுப்பப்போகும் குணாம்சங்கள் இவனிடமே உள்ளன என்பதை பின்னர் நீ அறிந்து கொள்வாய்.

பாட்டாளிகளின் மூன்று குணாம்சங்களாவன;

1. உழைக்கும் கரங்களைத் தவிர எவ்வித சொத்து மில்லாதவர். (அதனுல் இழப்பதற்கு எதுவுமில்லாதவர், அடிமை விலங்குகளைத் தவிர)

2. உற்பத்தியில் ஈடுபட்டு சுரண்டப்படுபவர். அவரது உபரி உழைப்பு முதலாளிகளால் அபகரிக்கப்படுகிறது.

3. தம் வர்க்க எதிரியை இனங்காணக் கூடியவர்.

முதலாவது குணாம்சத்தைப் படித்துவிட்டு பிச்சைக் காரரைப் பாட்டாளி என்று நீ கூற முன்வரலாம். பிச்சைக் காரர் உற்பத்தியில் ஈடுபடுவதில்லை என்ற இரண்டாவது குணாம்சம் அவர்கள் பாட்டாளிகள் அல்லர் என்பதை உறுதிப் படுத்துகிறது.

சந்தையை நம்பி வாழும் சிறு பண்ட உற்பத்தியாளர் என்ற வர்க்கத்தவரால் எதிரியை இனங்காண முடிவதில்லை, அதனுல் அவர்களும் பாட்டாளிகளாகார். இவர்களைப்பற்றிப் பின்னர் நீ விரிவாக அறிந்து கொள்வாய்.

ஒரு முக்கிய வேறு பாட்டை இங்கு நான் விளக்கிக் கூறவேண்டும். 'தொழிலாளி' என்பதற்கும் 'பாட்டாளி' என்பதற்கும் வேறுபாடு உள்ளதா என்று நீ கேட்கலாம். பலருக்கு அச்சந்தேகம் எழுவதுண்டு. நிட்சயமாக வேறுபாடு உள்ளது.

தமது உழைப்புச் சக்தியை நேரக் கணக்கில் முதலாளிக்கோ, அரசுக்கோ, வேறு எவருக்கோ விற்பவர்கள் எல்லோரும் தொழிலாளர்களே. தனிச் சொத்தோ, வேறு வகை வருமானமோ இவர்களுக்குக் கிட்டுமாயின் அவர்கள் பாட்டாளிகளாக மாட்டார்கள்.

பாட்டாளிகள் ஒரு சொத்துமற்றவர்கள்; உழைப்பில் ஈடுபட்டுச் சுரண்டப்படுபவர்கள் என்பதை நாம் மறந்து விடப்படாது. ஆகவேதான் எல்லாப் பாட்டாளிகளேயும், அவர்கள் யாவரும் தம் உழைப்பு நேரத்தைக் கூலிக்காக

விற்பதனால் தொழிலாளர்கள் என்று கூறிவிடலாம். ஆனால் எல்லாத் தொழிலாளர்களையும் பாட்டாளிகள் என்று நாம் கூறிவிட முடியாது.

தமது உழைப்புச் சக்தியை கூலிச்சந்தையில் விற்கும் பலர் தனிச் சொத்துடையவர் களாகவும் வேறு வருமானம் உள்ளவர்களாகவும் வாழ்வதைக் காண்கிறோம். குறைந்தநேர உழைப்புடன் அதிக கூலிபெறுபவர்களையும் காண்கிறோம். இவர்கள் உபரி உற்பத்தி செய்யாது பிறரது உபரி உழைப்பில் நயமாக வாழ்பவர்கள்; சமுதாயமாற்றத்திற்கு எதிராகவும் இருப்பர். இத்தகையோர் குட்டி முதலாளித்துவ குணாம்சம் கொண்டவர்கள் எனக் கூறத்தக்கவர்களாவர்.

நாள் பூராவும் உழைத்து கூலி எதுவும் பெறாதவர்களே அடிமைகள் ஆவர். கட்டிவைக்காத மாடுகள், எருமைகள் போல வாழ்பவர். கட்டிவைத்து உழைக்கச் செய்யும் மாடு, எருமை போல வாழ்ந்தவரை விலங்கு அடிமைகள் என அழைப்பர். தற்போது விலங்கு அடிமைகள் கிடையா. முன்னர் உரோமாபுரியில் விலங்கு அடிமைகள் வாழ்ந்தது பற்றிப் படித்திருப்பாய். அங்கு இவர்களே உற்பத்தியில் பிரதான பங்குவகித்தனர். இந்தியா, இலங்கையில் அடிமைகள் இருந்த போதும் உரோமாபுரி போல உற்பத்தி யில் பிரதான பாத்திரம் வகிக்கவில்லை.

மற்றும் ஒன்று அடிமைகள் பற்றிக் கூறவேண்டும். அடிமை கள் தாம் விரும்பியவாறு திருமணம் செய்யவோ, குடும்பம் நடத்தவோ முடியாது. எசமானே இவற்றையும் தீர்மானிப்பான்.

அன்பு நிறைந்த,
அப்பா

# 3. கூலி விவசாயி - கிராமப்புறப் பாட்டாளி

அன்பு மிக்க மானுக்கு,

கிராமப்புறப் பாட்டாளி பற்றிக் கூற வந்து பாட்டாளியுடன் நிறுத்தி விட்டேன் என்று நினைக்கிறாயா? பெரும்பாலும் நகரங்களில் யந்திர உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவரை குறிக்கும் பாட்டாளி என்ற சொல்லே முதலில் தோன்றியது. பின்னரே இந் நகர்ப்புறப் பாட்டாளியின் குணாம்சங்களைக் கொண்ட, கிராமப் புறப்பாட்டாளி என்ற வர்க்கத்தை சீனத்தலைவர் மாவோ முதன்மைப்படுத்தினார்.

இக் கிராமப்புறக் கூலி விவசாயிகளும் சொத்து எதுவு மற்றவர்கள். இவர்களது உபரி உழைப்புச் சக்தியும் சுரண் டப்படுகிறது. எவன் சுரண்டி வேலை வாங்குகிறான் என் பதையும் இவர்களால் அறிய முடிகிறது. ஆகவே நகர்ப் புறப் பாட்டாளிகளின் முக்கிய குணாம்சங்களை இவர்களும் கொண்டவர்கள், இக் கிராமப்புறப் பாட்டாளிகள் புரட்சிகரமான வர்க்கம் என தலைவர் மாவோ நடை முறையில் நிரூபித்துக் காட்டினார். சீனப் புரட்சியில் முக்கிய பங்கெடுத்தவர்களும் இவர்களே.

எங்கள் கிராமத்தில் கூலி விவசாயிகளாக பெரும் பாலும் உழைப்பவர்கள் சாதியினால் தாழ்த்தப் பட்ட மக்களே. இந்தியாவிலும் இதே நிலைமையே நிலவுகிறது. இவர்கள் இரு முறைகளால் அடக்கி ஒடுக்கப்படுகின்றனர், ஒன்று சாதி என்ற கருத்தியலான அடிமைநிலை. மற்றது கூலி அடிமை நிலை. சாதி எமது சமுக அமைப்பின் சாபக் கேடாகும். அது தோன்றியதற்குப் பல காரணங்கள் கூறப் படுகின்றன.

உபரி உற்பத்தி செய்யத்தக்க நிலைக்கு உற்பத்திக் கருவிகள் வளர்ச்சியடைந்ததும் போரில் தோற்றவர்களை வென்றவர்கள் அடிமையாக்கிக் கொண்டனர். உற்பத்திக் கருவிகள் உபரி உற்பத்தியை பெற்றுத்தரும் அளவுக்கு வளர்ச்சியடையாத காலகட்டத்தில் தோற்றவர்களைக் கொன்று குவித்தனர். குந்தவிக்குக் கடிதங்களில் இவ் உண்மைகளைப் படித்திருப்பாய்,

சாதிகள் தொழிலோடு பின்னப் பட்டிருப்பதால் தனிச் சமுக அமைப்பாக அவை தோன்றிவிட்டன. திருமணங்களும் அதே சாதியிலேயே நடைபெறுவதால் இன்றுவரை சாதி அமைப்பு உடையாதிருக்கிறது.

இந்தியா, இலங்கையில் ஆசிய உற்பத்தி முறையே நிலவி வந்தது. எவருக்கும் தனிச் சொத்தாக நிலம் இருக்கவில்லை, அவரவர் சமுகத்திற்கு வேண்டிய ஒவ்வோர் உற்பத்தியில் ஈடுபட்டு, தத்தமது தேவைகளுக்குப் பண்டங் களைப் பரிமாறிக் கொண்டனர். விவசாயி, கம்மாளர், நெசவாளி, பரியாரி, தச்சன், பூசாரி என இவ்வாறுக அவரவர் ஒவ்வொரு தொழிலை மேற் கொண்டனர். உற்பத்தி அதிக வளர்ச்சியடையாது கிராம மட்டத்தில் தன்னிறைவு கொண்டதாக இருந்தது. இந்நிலையில் அதிகாரத்துவம் வளர்ச்சியடைந்து சாதிப்பிரிவாக தொழில் கள் அமைந்தன என ஆராய்ச்சியாளர் கூறுவர்.

இதன்படி யந்திர உற்பத்தி பெருகி, பொருளாதாரம் வளர்ச்சியடைய சாதியமைப்பு உடைந்து வரும். இன்று இப்போக்கின் சாயலைக் காண்கிறோம். கிராமங்களிலேயே ஒருவரது சாதி பற்றிப் பேசப்படுகிறது. நகரங்களில், பெரிய தொழிற் சாலைகளில் சாதிப்பிரிவு பற்றிப் பேசுவது குறைந்து வருவதைக் காணலாம்.

எங்கள் கிராமங்களில் பள்ளர், பறையர். நளவர் என ஒதுக்கப்படும் இம் மக்கள் புரட்சிகர வர்க்கத்தவராவர். அறியாமையில் வாழ்வதால் அவர்களுக்கு தம் சிறப்புத்

தெரிவதில்லை. புரட்சிகர அரசியல் அவர்களிடை எடுத்துச் செல்லப்பட வேண்டும். அவர்களை ஐக்கியப்படுத்தி ஒன்று திரட்டவேண்டும்.

தாழ்த்தப் பட்ட இம் மக்களுக்கு தக்க கூலி கிடைப்ப தில்லை. உயர் சாதிக் காரரின் நிலங்களிலேயே குடிசைகளில் வாழநேரிடுகிறது. மட்டமான தொழில்களையும் இவர்கள் செய்ய நேரிடுகிறது. உயர் சாதிக்காரரை எதிர்த்து நின்றால் நிலத்திலிருந்து வெளியேற்றப் படலாம். குடிசைகள் எரிக்கப்படலாம். இத்தகைய இன்னல்களுக் கிடையில் இவர்கள் வாழநேரிடுகிறது.

மக்கள் எத்தனை தூரம் அடக்கி, ஒடுக்கப் படுகிறார்களோ அத்தனை வேகமாகக் கொதித்தெழுவர். கிராமப்புறப் பாட்டாளிகளிலும் பல சாதியினர் இருக்கலாம். ஆகக் குறைந்த சாதியினராகக் கருதப் படுபவர்களிடையே புரட்சிகர உணர்வு உயர் மட்டத்தில் இருப்பதைக் காணலாம்.

நகர்ப் புறப் பாட்டாளிகள் ஒரே தொழிற் சாலையில் நூற்றுக் கணக்காக வேலை செய்வதால் ஐக்கியப்பட்டு, தொழிற் சங்கம் அமைத்து போராடுவது எளிதாகிறது. ஓய்வுநேரம், உணவுவேளைகளில் கூடி தமது துன்பங்களைப் பகிர்ந்து பேசக் கூடிய நிலையில் உள்ளனர். பத்திரிகைகளைப் படித்து உலகப்போராட்டங்களைப் பற்றி அறியக் கூடியவாய்ப் புக் கொண்டவர்.

நாள்தோறும் வேலையும் மாதக் கூலியும் பெறுவதால் திட்டமிட்டு தமது தேவைகளைக் கவனிக்கக் கூடியதாக உள்ளனர். சிறு சிறு போராட்டங்களை நடாத்தி தமது பலத்தை அறியக் கூடிய நிலையும் கொண்டவர்.

கிராமப்புறப் பாட்டாளிகளுக்கு இத்தகைய வாய்ப்புகள் கிடையா. கல்வியறிவு, நிரந்தர வேலை, ஒரே இடத்தில் பெருந்தொகையானோர் கூட்டாக வேலை செய்வதுபோன்ற

வசதிகள் கிடையா. முதலாளித்துவம் நகரங்களில் அமைக்கும் ஒழுங்கு முறைகளும் கிடையா. இவற்றால் புரட்சிகர அரசியல் வேலை இவர்களிடை செய்வதே மிகச் சிரமமானது.

ஆயினும் சீனா போன்ற அரைக்காலனி அரை நிலப்பிர புத்துவ நாடுகளில் கிராமப்புறப் பாட்டாளிகளை அணிவகுத்தே சமுதாயப் புரட்சியை ஏற்படுத்த முடியும். இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

பாட்டாளிகளுடைய புரட்சிகர சித்தாந்தத்தை முன்வைத்தே கிராமப்புறப் பாட்டாளிகளும் நகர்ப்புறப் பாட்டாளிகளின் தலைமையில் சமுகப்புரட்சியை ஏற்படுத்த முடியும்.

உன்,
அப்பா

# 4. ஏழை விவசாயி - அரை உடைமை விவசாயி

அன்பிற்கினிய மானுக்கு,

கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கம் மற்றொரு வர்க்கத்தவர் ஏழைவிவசாயிகள். இவர்களிடம் போதிய நிலமிருக்காது. தமது ஒரு துண்டு நிலத்தோடு குத்தகையாகவும் நிலத்தைப் பெற்று விவசாயம் செய்வர். அதனாலேயே அரை உடைமை விவசாயி என்றும் கூறுகிறோம். இவர்களிடம் ஒரு சோடி மாடு, மண்வெட்டி போன்ற சில உற்பத்திக் கருவிகள் இருக்கலாம்,

குடும்பத்தில் உள்ளவர் யாவரும் வயலில் உழைப்பர். கூலி விவசாயிகளை அமர்த்த இவர்களுக்கு வலுவிருக்காது. அறுவடை காலங்களில் பிற ஏழை விவசாயிகளுக்கு உதவி, தமது அறுவடையின்போது அவரது உழைப்பைப்பெறுவர்.

இவர்கள் என்றும் வறுமையிலேயே உழல்வர். விவசாயத்தில் முதலீடுசெய்ய போதிய பணம் இருக்காது. அறுவடையின்போது தருவதாக அதிக வட்டிக்குக் கடன் பெறுவர். அறுவடையின்போது தானியம் முழுவதும் அல்லது பெரும்பகுதி கடனுக்காகப் போய்விடும். உண்பதற்காக, உடைகளுக்காக,பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப, மீண்டும் விவசாயத்தில் முதலீடு செய்ய இவ்விவசாயிகள் கடன்படுவர். இவ்வாறு கடனும் வட்டியும் ஏறிக்கொண்டே போகும்.

வறுமையைத் தாக்குப் பிடிக்கா வேளை கூலிவேலைக்கும் செல்வர். எத்தகைய கஷ்ட உழைப்பும் இவர்களுக்கு விடிவு தரமாட்டாது.

கடனும் வட்டியும் ஏற ஏற வேறு வழியின்றி தன் மாடு களையும் ஏரையும் கூடவிற்க நேரிடும்.

விவசாயத்தைக் குறைத்து, தன் துண்டு நிலத்தில்மட்டும் பின்னர் விவசாயம் செய்வான். மிகுதிக் காலமெல்லாம் கூலி வேலைக்குச் செல்வான்.

அப்போதும் வாழ்க்கைச் செலவிற்குத் தாக்குப்பிடிக்க முடியாது போய்விடும்.

எஞ்சிய துண்டு நிலத்தின்மேல் வட்டிக்குப் பணம்கொடுத் தவன் நெருக்கத் தொடங்குவான்.

பண்டிகைகள், பிள்ளைகளின் திருமணம், நோய் நொடி, சாவீடு போன்ற தாக்குப்பிடிக்க முடியாத எதிர்பாராத நிகழ்வுகளும் அவனது வறுமைக்குத் தூபம் போடும்.

இறுதியில் கடைசித் துண்டு நிலத்தையும் விற்றுவிட நேரும். சொத்துகள் யாவும் இழந்து இரண்டு கரங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும்,

வேறு வழியின்றி அவனும் நிரந்தர கூலி விவசாயி ஆகிவிடுகிறான்.

இன்றைய சமூக வளர்ச்சியில் இத்தகைய நிலை வேகமாக அதிகரித்துவரும் போக்காக உள்ளது. எம்நாட்டில் பல லட்சம் பேரும் இந்தியாவில் பல கோடி பேரும் ஆண்டு தோறும் இந்நிலைக்கு ஆளாகிறார்கள்.

கூலி விவசாயிப் பட்டாளமே பெருகி வருகிறது. அரசு வெளியிடும் கூலித்தொகைப் புள்ளி விவரங்களைப் பார்ப் பின் இவ்வுண்மை தெற்றெனத் தெரியும்.

இத்தகைய தேய்ந்துவரும் நிலையால் ஏழை விவசாயிகள் அல்லது அரை உடைமை விவசாயிகளும் நாட்டின் புரட்சி கரச் சக்தியாக உள்ளனர் என சீனத்தலைவர் மாவோ கணித்தார். காலப்போக்கில் கிராமப்புறப் பாட்டாளியாக

மாறிவரும் இவர்களையும் சமுகப் புரட்சிப் போராட்டத்தில் அரவணைத்துக்கொள்ள வேண்டும் என அவர் கூறியது மட்டுமல்ல நடைமுறையிலும் இணைத்து வெற்றி கண்டார்.

எப்பொழுதும் வாழ்க்கையில் பாதிக்கப்பட்டவர்களே புத்துணர்வுபெற்று கொதித்தெழுவதைக் காணலாம். ஏழை விவசாயிகளும் இதற்கு விலக்கல்லர்.

ஏழை விவசாயியின் துண்டு நிலத்தையும் பறித்தெடுத்த பணக்கார விவசாயி அல்லது நிலப்பிரபு என்றும் அவன் எதிரியாகவே இருப்பான். தன்சொந்த நிலத்தில் பணக்கார விவசாயியின் பயிர் செழித்து வளர்வதைக் காணும் வேளை, யெல்லாம் அவனது நெஞ்சு குமுறவே செய்யும். தன் பிள்ளைகளிடமும் அந்நிலத்தைக் காட்டி, நிலைமையைக் கூறி பெருமூச்செறிவான். இப்பகைமை உணர்வு எளிதில் தணிந்து விடுவதில்லை,

ஏழை விவசாயிகள் நிரந்தர கூலி விவசாயிகளிலும் பார்க்க சில வேளைகளில் சாதியில் உயர்ந்தவர்களாக இருக்கலாம், இதனால் இருவர்க்கத்தவரையும் ஒன்றிணைப் பதிலும் பிரச்சனைகள் ஏற்படலாம். இத்தகைய முரண்பாடு களையும் நாம் சிறப்பாகக் கையாண்டே ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் போர்க்குணத்தையும் வளர்க்க முடியும்.

நிலத்தை வாழ்வாக, உயிராக மதிக்கும் கிராம விவசாயிகள் நிலத்தை இழந்த பின்னர் பகைமை உணர்வு கொண்டவர்களாகவே இருப்பர். இவ்வுணர்வுகள் நிலத்தை அபகரித்த வர்க்கத்தவர் மேல் ஒருமுகப் படுத்தப்படுவதன் மூலம் சமுகப் புரட்சிக்கு வித்திட முடியும், அதற்கே புரட்சிகர அரசியல் புகட்டப்படவேண்டும். புரட்சிகர அரசியல் பற்றி பின்னர் கற்றுக்கொள்வாய்.

அன்புடன்,
அப்பா

# 5. நடுத்தர விவசாயி-
# சிறுபண்ட உற்பத்தியாளர்

அன்பு மானே,

ஒவ்வொருவரும் எவ்வர்க்கத்தைச் சார்ந்தவர் என்பதை அவராகவே தீர்மானிப்பதில்லை. வரலாற்றுப் போக்கில் உற்பத்தி உறவு ஏற்படுவதைக் கொண்டே வர்க்கம் தீர்மானிக்கப்படுகிறது. இவ்வுண்மையையும் மறந்துவிட வேண்டாம்.

உன் அப்பா நடுத்தர விவசாயக் குடும்பத்திலேயே பிறந்தவர். அது என் தவறல்ல. நான் பிறந்து, உழைத்து, வளர்ந்த வரலாறு முழுவதையும் நீ அறிந்திருக்கமாட்டாய். தற்போது சித்தப்பாவின் விவசாயத்தைப் பார்த்து அதே போலவே நாமும் உற்பத்தியில் ஈடுபட்டு ஓரளவு வளமாக வாழ்ந்தோம் என எண்ணி விடாதே.

நடுத்தர விவசாயி வர்க்கமென்றால் குடும்பமாக உற்பத்தியில் ஈடுபடுபவர்கள், தமது விவசாயத்திற்கு வேண்டிய நிலம், ஏர், மாடுகள், மண்வெட்டி ஆகிய உற்பத்திச் சாதனங்களை உடையவர்கள். தமது விவசாயத்திற்குவேண்டிய ஓரளவு மூலதனத்தை உடையவர். விவசாயச் சங்கங்களில் அங்கத்தவராயிருந்து கிடைக்கக் கூடிய சலுகைகளில் ஓரளவு பெறக்கூடியவர். கணவன், மனைவி, பிள்ளைகள் யாவரும் வயலில் குடும்பமாக உழைத்தபோதும் விதைப்பு,களை பிடுங்கல், அறுவடைக்காலத்தில் கூலிவிவசாயிகளின் உழைப்பை ஓரளவு வாங்கிக் கொள்வர்.

அறுவடையின்போது தமது தேவைக்கு வேண்டிய, தானியத்தை வைத்துக்கொண்டு மேலதிக விளைபொருளை இவர்கள் சந்தையில் விற்றுவிடுவர். உடைகள் வாங்குதல், பிள்ளைகளைக் கல்விக்கு அனுப்புதல், வீட்டுக்கு வேண்டிய பிற பண்டங்கள் வாங்குதல், கடனடைத்தல், உற்பத்திச்

கருவிகளைப் பழுது பார்த்தல், உரம் விதை நெல் வாங்குதல் பண்டிகைச் செலவுகள் ஆகிய யாவற்றிற்கும் விளை பொருளில் தேவைக்கு மேலதிக பங்கை சந்தையில் விற்பதன் மூலமே சரிக்கட்ட முயல்வர், போதிய விளைச்சல் இல்லாத போது மாடுகளை விற்று, கடன்பட்டு அல்லது நிலத்தில் ஒரு பகுதியை விற்று சமாளிக்க முயல்வர். தொடர்ந்து விளைச்சல் பாதிக்கப்படின் ஏழை வீவசாயியாகவும் மாறநேரிடும்.

இந்தியாவிலும் இலங்கையிலும் பெரும் பகுதி மக்கள் விவசாயிகளாகவே உள்ளனர். இவர்கள் துண்டாடப்பட்ட நிலங்களில் விவசாயம் செய்பவர்கள். இவர்களது மேலதிக விளை பொருளைச் சந்தையில் அறுவடைகாலத்திலேயே விற்க நேர்வதால் அங்கு வியாபாரிகள் மலிந்த விலையில் வாங்கிவிடுகின்றனர். இவர்களது உபரி உழைப்பு சந்தை மூலம் சுரண்டப்படுகின்றது விவசாயிகள் சந்தையைக் குறை கூறுவதல்லாது வியாபாரிகளை இனங்காண்பதில்லை. சில வேளைகளில் தாம் வியாபாரிகளுக்கு விற்ற பொருளையே பின்னர் அதிக விலை கொடுத்து வாங்கவும் நேரும்.

பாட்டாளிகள் போல, கிராமப்புறப் பாட்டாளிகள் போல எதிரியை இனங்காண முடியாதவர்களாக நடுத்தர விவசாயிகள் உள்ளனர், இதனால் புரட்சிகர உணர்வு குன்றியவர்களாகவும் இருப்பர்.

நடுத்தர விவசாயிகளையும் சிறுபண்ட உற்பத்தியாளர் என்பதன் கீழ் லெனின் வகைப்படுத்தினார். இவர்கள் சமூக மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாதவர் சோஷலிசம் வரின் தமது சிறிய நிலமே பறிபோய் விடுமோ என அஞ்சுவர். நாட்டில் பெரும்பான்மையினராகவும் உள்ளனர். நிலப் பிரபுக்கள் சிறுபான்மையினராகப் பெரும்பான்மை நிலத்தை உடையவராயிருப்பர். அவர்களிடம் நிலத்தைப் பறித்தெடுத்து சமூக உடைமை ஆக்குவது எளிது. ஆனால் நடுத்தர விவசாயிகளை உணரவைப்பது, கூட்டுப் பண்ணை விவசாயிகளாக்குவது யாவும் மிகச் சிரமமாகும்.

லெனின் சோவியத் நாட்டில் இவர்களை வென்றெடுப்பதற்கே மிகவும் கஷ்டப்பட்டார்; புரட்சியின் பின்னர் இவர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றியும் பலதடவை கூறியுள்ளார். எதிர்ப் புரட்சியாளர் களாகவும் இவர்கள் மாறிவிடலாம். இவர்கள் இரண்டு ஆத்மா கொண்டவர்கள், சந்தர்ப்பவாதிகள் எனவும் வைதார்.

விஞ்ஞான வளர்ச்சியையும் நவீன விவசாய முறைகளையும் கூட இவர்கள் எளிதில் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளும் ஒரு பகுதியினர் பணக்கார விவசாயிகளாக மாறும் வாய்ப்பு உளது. 1968 ம் ஆண்டின் பின் உலகவங்கியின் அதிபதியாக இருந்த மக்னமாரா என்பவன் பசுமைப் புரட்சி என மூன்றாம் உலக நாடுகளின் விவசாயிகளுக்கு கடன் வழங்க மூன் வந்தான். இரண்டாவது உலக யுக்கத்தின் பின்னர் முதலாளித்துவ நாடுகளில் யந்திர உற்பத்திகள் பெருகின. டிராக்டர்கள். பம்செட்டுகள் இரசாயன உரங்கள் கிருமி நாசினிகள் ஆகியவற்றின் உற்பத்தியும் அதிகரித்துத் தேங்கிக் கிடந்தன. முதலாளித்துவநாடுகள் இவற்றை மூன்றாம் உலகநாடுகளில் விற்பதற்குமாகவே உலக வங்கிக்கடன்கள் வழங்கப்பட்டன. பசுமைப் புரட்சியின் அடித்தளம் இதுவே; அறிந்துகொள்.

யார் இந்தப் பணக்கார விவசாயிகள் என்று கேட்கிறாயா? இவ் வர்க்கத்தவர்களைப் பற்றியே அடுத்து எழுதப் போகிறேன்.

நடுத்தர விவசாயிகளில் பெரும்பாலோர் தங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி தருவதிலும் ஆர்வம் காட்டுவர். விவசாயத்திலும் பார்க்க கல்விமூலம் உத்தியோகம்பெற்று பிள்ளைகள் மேலதிகமாக உழைக்க முடியும் என்ற நம்பிக்கையும் கொண்டவர்.

நீ சிறுமியா யிருந்தபோது நான் இரண்டு ஆண்டுகள் கிராமப் பகுதிகளில் விவசாயிகளிடை அரசியல் போதிப்பதில்

ஈடுபட்டிருந்தேன். அவ்வேளை எனக்கு வழிகாட்டியாக இருந்தவர் நடுத்தர விவசாயியையும் பணக்கார விவசாயியையும் இலகுவாக இனங்கண்டு கொள்ள ஒரு முறையைக் கற்பித்தது இன்னும் என் நினைவில் உள்ளது.

வயல் வெளியில் கிராமங்கள் ஊடாகச் செல்லும் வேளை வரப்பில் காணும் பையனோடு உரையாடிவிட்டு 'உன் அம்மா எங்கே?' என்று கேட்பார், 'வயலில்' என பையன் கூறின் நடுத்தர விவசாயி எனவும் 'வீட்டில்' எனச் சொல்லின் பணக்கார விவசாயி எனவும் கணித்துவிடுவார்.

நடுத்தா விவசாயி குடும்பமாக உற்பத்தியில் ஈடுபடுபவன் என்று முன்னர் கூறினேனல்லவா? பணக்கார விவசாயியின் மனைவி வயலுக்குச் செல்லமாட்டாள். உன் சின்னம்மா வயலுக்குச் செல்வதைப் பார்த்திருக்கிறாயா? அவர்கள் என்ன வர்க்கம்?

அன்பு நிறைந்த,
அப்பா

# 6. பணக்கார விவசாயி- கிராமப்புற முதலாளி

அன்பான மான்குட்டிக்கு,

பணக்கார விவசாய வர்க்கத்தவர் எப்படி இருப்பர் என்பதற்கு உன் சித்தப்பாவே தக்க உதாரணமாகும். சித்தப்பா காலையில் நீராடி, வெள்ளை சேட்டும் அணிந்து கொண்டு சயிக்கிளில் தோட்டத்திற்குச் செல்வதைப் பார்த்திருப்பாய், அங்கு அவர் மண்வெட்டியை எடுப்பதையோ, பயிரின் பாத்திகளுக்கு தண்ணீர் விடுவதையோ, வரம்பு கட்டுவதையோ நீ காணமாட்டாய். சின்னம்மாவோ, உன் அக்காமாரோ வயலுக்குச் செல்வதே யில்லை, தம்பி உதயன் மட்டும் சிலவேளைகளில் கூலி வேலை செய்பவர்களுக்குத் தேநீர் அல்லது உணவு எடுத்துச் செல்வதைக் காணலாம்.

பணக்கார விவசாயிகள் தமக்குப் பயிரிட வேண்டிய போதிய நிலத்தை உடையவராவர். விவசாயத்தில் விஞ்ஞான முறைகளை ஏற்றுக் கொள்பவர். கூலி விவசாயிகளைக் கொண்டே வேலை யாவையும் செய்விப்பர். ஓரளவு கூலிகளை நிரந்தரமாக வைத்திருப்பர்.

இவர்கள் டிராக்டர் வைத்து உழுவர்; அல்லது வாடகைக்கு அமர்த்தி உழுவர். நீரிறைக்க பம்செட் வைத்திருப்பர். இரசாயன உரம், கிருமிநாசினி போன்றவற்றைப் பயன் படுத்துவர். மூலதன வாய்ப்புகள் உள்ளவர். விளைபொருளை உடனே சந்தையில் விற்கவேண்டிய தேவை இவர்களுக்குக் கிடையாது. விலை ஏற்றம் பார்த்து ஒய்வாக ஏற்ற விலையில் விற்பர்.

விவசாயச் சங்கங்களில் இவர்கள் தலைமை வகிப்பர். தமக்கு வேண்டிய மூலதனத்தையும் குறைந்த வட்டியில்

விவசாயச் சங்கம், வங்கிகளிலிருந்து பெற்றுவிடுவர். அரசு வழங்கும் மானியம் சலுகைகளை முழுமையாகப் பெற்று விடுவர்.

தமது பிள்ளைகளை உயர் கல்விக்கு அனுப்புவர்.

கார், லாரி, டிராக்டர் போன்ற வாகனங்களையும் வைத்திருக்கும் வாய்ப்பையும் உடையவர்.

ஏழை. நடுத்தர விவசாயிகளுக்குத் தானியத்திற்கு அல்லது வட்டிக்குப் பணம் தருவர். அவர்களது நிலங்கள் விற்பனைக்கு வரும்போதும் வாங்கிக் கொள்வர். தம் நிலப் பரப்பைக் கூடியவரை விரிவு படுத்த முயல்வர்.

கிராமப் புறத்தில் அரசியலாதிக்கம் உள்ள வர்க்கத்தவர் இவரே. நாட்டின் பெரும்பாலான வர்க்கத்தவர் கூலி ஏழை விவசாயிகளே. இவர்கள் பணக்கார விவசாயியின் ஆதரவிலேயே கிராமங்களில் வாழ்பவர். ஆகவே பணக்கார விவசாயி சார்ந்திருக்கும் பக்கமாக வாக்களித்து விடுவர். தேர்தலின்போது பணக்கார விவசாயிகள் இவர்களுக்கு பணம் வழங்கி, லாரியில் ஏற்றிச் சென்று வாக்களிக்கச் செய்வதையும் காணலாம்.

தேர்தல் முடிந்ததும் இவ்வர்க்கத்தவர் அரசின் சில சலுகைகளைப் பெறுவர். பின்னர் மறுதேர்தல்வரை ஒதுக்கப்பட்டு விடுவர். இவர்கள் அரசுக்கு எதிராகப் போராட்டங்களை நடாத்தும்போது கூலி, ஏழை விவசாயி களைத் தம்முடன் சேர்த்துக் கொள்வர்.

தமிழ் நாட்டில் நாராயணசாமி நாயுடு என்பவர் பணக்கார விவசாயிகளுக்குத் தலைமை தாங்கினார். அவர் கூலி, ஏழை விவசாயிகளை லாரியில் அழைத்துவந்து பல போராட்டங்களை நடாத்தி வெற்றிபெற்றார்.

இலங்கையிலும் இந்தியாவிலும் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பவர் இவர்களே. ஏனெனில் 75 சதவீத மக்கள்

கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றனர். அங்கு ஆதிக்கம் பணக்கார விவசாயிகளின் கையிலேயே உள்ளது.

பணக்கார விவசாயிகள் போதிய வருமானவரி செலுத்தாது தப்பிக் கொள்கின்றனர். நில உச்சவரம்புச் சட்டத்தை உதாசீனம் செய்வர். வரி ஏய்ப்பு, அரசுக் கடன் ஏய்ப்பு ஆகியவற்றில் இவர்கள் தீரர்கள். வெள்ளம், வரட்சி போன்ற இயற்கையின் சீற்றங்களையும் தமக்குச் சாதக மாக்கி அரசுடன் போராடிப் பலனடைவர்.

அரசின் கட்டாய கொள்முதல் (லெவி) இவர்களை ஓரளவு பாதிக்கவே செய்கிறது. வேறு மறைமுக வழிகளால் இவ்விலை குறைப்புகளை ஈடு செய்ய முயல்வர். தமிழ் நாட்டில் மின்சார பில் பாக்கியை உரிய காலத்தில் செலுத் தாது இவர்கள் பயனடைவதைக் காணலாம். யந்திர உற்பத்தியாளர் போல, தமது விளைபொருளின் விலையை பணக்கார விவசாயிகளால் தீர்மானிக்க முடிவதில்லை. நகர்ப் புறத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் மலிவு விலையில் கிடைக்கச் செய்யவேண்டியுள்ளது.

அல்லது அவர்கள் உயர்ந்த கூலிக்காகப் போராடுவர். தொழிலாளர் போராட்டம் யந்திர உற்பத்தியாளரைப் பாதிக்கும். அரசியலாதிக்கம் யந்திர உற்பத்தியாளரிடம் இருப்பதால் விவசாயிகள் உயர்ந்த விலை பெற்று அதிக உபரி லாபத்தைப் பெற முடியாதுபோக நேரிடுகிறது.

டிராக்டர், அவற்றின் உதிரிப்பாகங்கள், பம் செட், இரசாயன உரம், கிருமிநாசினி ஆகியவற்றை யந்திர உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதலாளிகள், தரகுமுதலாளி களே உற்பத்தி செய்கின்றனர். இவர்களே ஆளும் வர்க்கமாக உள்ளவர். அரசியலாதிக்கம் கொண்டவர் தம் யந்திரப் பண்டங்களின் விலையை தாமே நிர்ணயிக்கும் வல்லமை பெற்றவர். ஆகவே தம் உற்பத்திப் பண்டங்களின் விலைகளை அவ்வப்போது உயர்த்தி பணக்கார விவசாயிகள்

பெறும் உபரிலாபத்தில் பெரும்பங்கை அபகரித்துக் கொள்வர்.

இதனால் ஆளும் வர்க்கத்தை எதிர்த்துப் போராடுவதில் பணக்கார விவசாயிகளும் துணைபுரிவர்.

பணக்கார விவசாயிகள் கூலி ஏழை விவசாயிகளை அத்துமீறிச் சுரண்டுபவர் இதனால் பணக்கார விவசாயி களுக்கும் கூலி, ஏழை விவசாயிகளுக்கு மிடையில் பகைமை உறவு என்றும் நீடிக்கவே செய்யும் கூலி. ஏழை விவசாயிகள் நேரடியாக இனங்காணும் எதிரிகள் பணக்கார விவசாயிகளே.

இன்று கூலி விவசாயிகளும் சங்கம் அமைத்து உயர்ந்த கூலிக்காகப் போராட்டங்கள் நடாத்துகின்றனர். ஆயினும் புரட்சிகர அரசியல் போராட்டமே இவர்கட்கும் விடிவு தரக் கூடியதாகும்.

கிராமப்புறங்களில் ஆரம்பகால புரட்சிப் போராட்டங் களைப் பணக்கார விவசாயிகள் நசுக்கவே செய்வர். போராட்டம் வலுவடைந்து நகரங்களைச் சுற்றி வளைக்கும் போராட்ட காலத்தில் இவ்வர்க்கத்தவர் புரட்சிக்கு ஆதரவளிப்பர். சீனாவில் நடைபெற்ற புரட்சியின் போதும் இவ்வாறே நடைபெற்றது.

கூலி மீனவரை அமர்த்தி ரோலர் அல்லது பெரியபடகு மூலம் மீன்பிடிக்கும் பணக்காரமீனவர், பல கைத்தறிகளை, பவர் லூம்களை வைத்து கூலி நெசவாளரைக் கொண்டு உழைக்கச் செய்யும் பணக்கார நெசவாளர் யாவரும் பணக்கார விவசாயிகளின் வர்க்கத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டியவர்கள் என்பதை மறந்து விடாதே.

அன்புடன்,
அப்பா

# 7. நிலப்பிரபுக்கள் - நிலச்சுவான்தார்கள்

அன்பு மானுக்கு,

நிலப் பிரபுக்கள் நேரடியாக பணக்கார விவசாயிகள் போல விவசாயத்தில் ஈடுபடுவதில்லை. நிலத்தைக் குத்தகைக்கு விட்டு வாழ்பவர்கள். குத்தகையை பணமாக அல்லது பண்டமாகப் பெற்றுவிடுவர் அறுவடைத் தானியத்தில் ஒரு பங்கு. அதையே பண்டம் என்றேன்.

குத்தகை விவசாயிகளின் உபரி உழைப்பு பெரும்பாலும் பண்டமாகவே அபகரிக்கப் பட்டுவிடுகிறது உழைப்பவரின் உபரியை அபகரிக்கும் வகைகள் மூன்று: பண்டம் முதலாவது· தொழிலாளர்களின் உழைப்பு நேரத்தால் அபகரிக்கப் படுகிறது. எட்டு மணி நேரம் வேலை செய்தால் 3-4 மணி நேரத்திற்கே கூலி கொடுக்கப்படுகிறது; மிகுதி நேரத்தை முதலாளி அபகரிக்கிறான். இது இரண்டாவது. நடுத்தர விவசாயியின் உபரி சந்தையால் அபகரிக்கப்படுவதை முன்பு கண்டோம். இது மூன்றாவது.

ஒரு காலத்தில் மிகவும் ஆதிக்கம் மிக்க வர்க்கத்தவரா யிருந்தவர்கள்; நிலப்பிரபுத்துவ அமைப்பும் உற்பத்திமுறை களும் சிறிது சிறிதாக உடைய ஆதிக்கம் குறைந்தவர்களாகி, நில உச்சவரம்பு சட்டங்களும் பாதிப்பு ஏற்படுத்தின.

சாதியில் உயர்ந்தவர்களாக இருப்பர். அடியாட்களை வைத்து ஒரு காலத்தில் கிராமங்களில் ஆட்சிபுரிந்தவர்கள்.

இலங்கையில் இவ்வர்க்கத்தவர் மிகவும் குறைந்து விட்டனர்; இந்தியாவில் இவர்கள் இன்று வேறு வடிவம் எடுத்து நிலைத்துள்ளனர்.

நிலக் குத்தகையினால் போதிய வருமானம் கிட்டாத தால் நிலங்களை விற்று நிலப்பிரபுக்கள் வேறு தொழில்

களில் முதலீடு செய்கின்றனர். கிராமப்புறங்களில் தமது (உயர்)சாதி, அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி ரைஸ்மில், கரும்பாலை நிறுவுகின்றனர்; சினிமாத் தியேட்டர்கள் கட்டுகின்றனர்; லாரிகள், பஸ்கள் வாங்கி வாடகைக்கு விடுகின்றனர். பொது பஸ் சேவைகள் நடாத்து கின்றனர்.

இவை தவிர கமிஷன் ஏஜெண்டுகளாகக் கிராமங்களில் விளையும் பொருட்களை வாங்கி நகரங்களுக்கும் யந்திர உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தரகு முதலாளிகளுக்கும் வழங்குகின்றனர். ஏழை, நடுத்தர விவசாயிகள் தமது விளை பொருட்களை இவர்களுக்கே விற்கவும் நிர்ப்பந்திக்கப்படுவர்.

கிராமப்புறங்களில் அரசு நடைமுறைப்படுத்தும் அபி விருத்தித் திட்டங்கள், கண்டிராக்குகள் ஆகியவற்றையும் இவர்களே எடுத்துச் செய்வர். மதுபானக் கடைகளும் இவர்கள் ஆதிக்கத்திலிருந்து தப்பிவிடா.

கோவில்கள், டிரஸ்டிகளும் இவர்கள் ஆதிக்கத்திலேயே நடைபெறும். சாதி, சமய அமைப்புகளை உடையவிடாது காப்பாற்றுபவர்களும் இவர்களே.

கிராமப்புறங்களில் ஆரம்பப் பாடசாலைகளையும் அரசின் ஆதரவைப் பெறுவதற்காக நடாத்துவர்.

கிராமப்புறங்களில் நடைபெறும் கூட்டங்கள், விழாக் களுக்கு தலைமை தாங்குபவரும் இவரே. அரசு அதிகாரிகள் வரும்போது இவர்கள் வீட்டிற்கே முதலில்வந்து விருந் துண்பர். பொலிசாரும் குற்றவியல் காரணமாகக் கிராமத்துள் நுழையுமுன் இவர் வீட்டுக்குச் சென்றே முதலில் விபரங்களைக் கேட்டறிவர். இவர் கூறுபவையே பொலிசாருக்கு உண்மை.

விவசாயச் சங்கங்கள், வங்கிகளில் வாய்ப்புகள் பெற்றுக் கொள்வர். குறைந்த வட்டியில் போதிய பணம்பெறும் வாய்ப்பு உள்ளவர். ஏழை நடுத்தர விவசாயிகளிடம் ஈ விரக்கமின்றி வட்டி வசூலிப்பவர்.

கிராமப்புறத்தில் இவர்களைப் பகைத்து வாழ்வது கடினம். தேர்தல்களின் போதும் தமது சாதி, பண, ஆதிக்கச் செல்வாக்குகளைப் பயன்படுத்திக் கொள்வர்.

சமுதாய மாற்றங்களை சிறிதும் விரும்பார். நிலப் பிரபுத்துவ குணாம்சங்களான சாதி, சமய, வைதீக, சடங்கு முறைகளைத் தொடர்ந்து நிலைநாட்ட முயல்வர்.

கிராமப்புறத்தில் புரட்சிகளை நசுக்கும் முதல் எதிரியாக இவரே முன் நிற்பர். இவர்கள் ஏகாதிபத்திய தாசர் களாகவே இருப்பர். இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்திலே இவர்கள் ஆங்கிலேயரின் காலை வருடியவர்கள்.

கிராமப்புற ஆதிக்கத்தில் பணக்கார விவசாயிகளுக்கும் நிலப்பிரபுச்களுக்கு மிடையில் முரண்பாடுகள் எழவே செய்யும். நசிந்த வர்க்கங்களான கூலி, ஏழை விவசாயிகள் இம்முரண்பாடுகளைத் தமது வர்க்க நலனைக் கருத்திற் கொண்டு சரியாகக் கையாளப் பழகிக்கொள்ள வேண்டும்.

ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளாக, தரகு முதலாளி களின் ஏஜெண்டுகளாகக் கிராமப்புறங்களில் இன்று ஆதிக்கம் செலுத்துபவர் இந்நிலப்பிரபுக்களே யாவர். நிலப்பிரபுத்துவ அமைப்பு உடைந்து விடாது காப்பதற்கு உதவுவரும் இவர்களே.

இந்திய கிராம பஞ்சாயத்திலும் இவர்களே தலைமை வகித்து நீதி வழங்குவர்.

நிலப்பிரபுக்கள் விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்ளாத போதும் இன்றைய நவீன விஞ்ஞானப் பண்டங்களைப் பயன் படுத்திக் கொள்வர். தம் பிள்ளைகளை உயர் கல்விக்காக நகரங்களுக்கு அனுப்புவர். தம் வீட்டுத் திருமணம், சடங்கு களை ஆடம்பரமாக நிழ்த்துவர். தம் பண்டைய புகழை அடிக்கடி பேசி, தம் போலி நடவடிக்கைகள் மூலமும் தம் அந்தஸ்தை எப்பொழுதும் உயர்த்திக் கொள்வர்.

அன்பு.
அப்பா

# 8. பாட்டாளிகள்- தொழிலாளர்கள்

இனிய மான்விழிக்கு,

தொழிலாளரை எமது அச்சகத்திலே பார்த்திருப்பாயே. அவர்களுடன் பழகி, இடையிடை கேலி பேசிய போதும் அவர்களது முழு குணாம்சங்கள் பற்றி நீ அறிந்திருக்க மாட்டாய்.

நீயே சில வேளை காலையில் எட்டுமணிக்கு மணியடிப்பாய். உடன் அனைவரும் வந்து கையெழுத்திட்டு அவரவர் வேலையைக் கவனிப்பர். அச்சு யந்திரங்களை ஒட்டுவர். தேநீர் இடைவேளை, நண்பகல் உணவுக்கு ஓய்வு, மாலைத் தேநீர் இவ்வாறு ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. வாரத்தில் 45 மணி நேர வேலை செய்வர். நிரந்தரமாக வேலை செய்வோர் மாதச் சம்பளம் பெறுவர். மற்றவர் வாரச் சம்பளம் வாங்குவர். வாரம் 45 மணிக்கு மேல் வேலை செய்வதற்கு 'ஓவர் ரைம்' என மேலதிகக் கூலி வழங்கப்படும்.

இத்தொழிலாளர் யாவரும் தமது உழைப்புச் சக்தியை நேரக் கணக்கில் எமக்குக் கூலிக்கு விற்பவராவர். பேப்பரையும் அவர்களது உழைப்புச் சக்தியையும் நாம் விலைக்கு வாங்கி அச்சிட்டவற்றை அதிக விலைக்கு விற்கிறோம். இவற்றில் எமக்கு அதிக லாபம் கிடைப்பதினாலேயே அக்கா, அண்ணா, உன்னை பெரிய பாடசாலைகளுக்கு அனுப்பி கல்வி கற்பிக்க முடிகிறது. அத்தொழிலாளரின் பிள்ளைகளிலும் பார்க்க வாய்ப்பாக நீங்கள் வாழ முடிகிறது. எப்படி என்று கேட்கிறாயா? எங்களிடம் அச்சுயந்திரம், அச்செழுத்துகள், பேப்பர், மின்சார வசதி, பிற செலவிற்குப் பணம் (மூலதனம்) யாவும் உள்ளன. இவற்றையே உற்பத்திச் சாதனங்கள் என்று கூறுவோம்.

பாட்டாளிகள் தோன்றிய வரலாறு, பாட்டாளிக்கும் தொழிலாளிக்கு முள்ள வேறுபாடு பற்றி முன்னர் எழுதினேன்.

தொழிலாளர்களில் பெரும்பாலானோர் பாட்டாளி களாகவே உள்ளனர். பாட்டாளிகள் பெருகிவருவதே இன்றைய சமூக அமைப்பின் நியதியாகும்.

உற்பத்திச் சாதனங்களை உடைய முதலாளிகளுக்கு உழைப்புச் சக்தியை விற்று உயிர்வாழ நேருவதால் அவர் களிடை ஒற்றுமை, ஒழுங்கு, வர்க்க உணர்வு ஏற்படுத்த வாய்ப்பாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே தொழி லாளர்கள் தொழிற் சங்கங்களை அமைத்துக் கொள்கின் றனர். அரசும் தொழிற்சங்க அமைப்புகளை அங்கீகரிக் கிறது; வேலை நிறுத்தம் செய்யும் உரிமை, பிணக்குகளைத் தீர்க்க நீதிமன்றங்கள் என சட்டங்கள் ஆக்கியுள்ளன. இவ்உரிமைகள் அவர்களுக்கு சும்மா கிடைக்கவில்லை' தொழிலாளிவர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகளே இவையாகும். ஆயினும் இச்சட்ட உரிமைகளின் எல்லை களையும் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கம் அறியாம லில்லை.

தொழிற் சங்கங்களின் அடிப்படை நோக்கம் இரண்டு; ஒன்று வேலை நேரத்தைக் குறைப்பது; இரண்டாவது கூலியை உயர்த்துவது. ஒரு காலத்தில் வாரத்தில் 80 மணி நேரம்வரை உழைப்புச் சக்தியை விற்ற தொழிலாள வர்க்கம் இன்று 45 மணி நேரத்திற்குக் குறைத்துக் கொண்டது. கூலி உயர்வுப் போராட்டங்களில் அரசே தலையிட்டு ஆகக் குறைந்த ஊதியம், வாழ்க்கைப்படி, ஆகக் குறைந்த விகித போனஸ் ஆகியவற்றைச் சட்டபூர்வமாக நியமிக்க முன்வருகிறது.

கூலி உயர்வுப் போராட்டங்கள் தொழிலாள வர்க்கத் திற்குப் பயன்தராது. கூலியை உயர்த்தும் வேளை முதலாளி கள் பண்டங்களின் விலையையும் உயர்த்தி விடுகிறார்கள்

எனச் சிலர் கூறுவர். இது தவறு. தொழிலாளர் ஒன்று திரண்டு கூலி உயர்வுப் போராட்டம் நடத்துவதன் மூலம் முதலாளி அபகரிக்கும் உபரி மதிப்பைக் குறைத்து விட முடியும். ஆகவே கூலி உயர்வுப் போராட்டம் தொழிலாளருக்கு வாய்ப்பளிக்கும் என மார்க்ஸ் கூறியுள்ளார்.

ஆனால், கூலி உயர்வுப் போராட்டம் மூலம் தொழிலாளி வர்க்கம் நிரந்தர விடிவுகாண முடியாது. புரட்சிகர அரசியல் மூலமே அவர்கள் புதிய சமுக அமைப்பை ஏற்படுத்தி தமக்கும் விடிவு தேடிக் கொள்ள முடியும் இன்று தனியார் சொத்தாக உள்ள உற்பத்திச் சாதனங்கள் பின்னர் சமுக உடைமை ஆகிவிடும் தொழிலாளர் உற்பத்தி செய்யும் உபரி மதிப்பைத் தனியார் அபகரித்து வாழும் கொடுமை ஒழிந்து விடும்; கூலி அடிமை நிலை அழிந்துவிடும்.

தொழிற் சங்கங்கள் பரவலாக பல்வேறு அரசியலுடன் அமைக்கப் பட்டு பிளவு பட்டிருப்பதும் சமுகப்புரட்சிக்குத் தடையாக உள்ளது. ஒவ்வொரு தொழிற் சங்கமும் தம் சங்கத்தைச்சேர்ந்தவர்களின் கூலி உயர்வுக்காகப் போராடி வெற்றி பெற்ற பின் மற்றைய சங்கங்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கத் தவறுகின்றனர், உதாரணமாக, காப்புறுதிக் கூட்டுத்தாபனம். வங்கிகள், சர்வதேசக் கம்பனிகளில் உள்ள தொழிலாளர் தனித்தனியாகப்போராடி உயர்ந்த கூலி பெறுகின்றனர். முதலாளிகளின் தொழிற் சாலைகள், வியாபார நிலையங்களில் குறைந்த கூலியே வழங்குகின்றனர். இவர்கள் உயர்ந்த கூலிக்காக வேலை நிறுத்தம் செய்யும் போது. வாய்ப்பான கூலி பெறுபவர் ஆதரவு வழங்குவதில்லை. இதனால் தொழிலாளரின் ஒன்று பட்ட வர்க்க உணர்வு பாதிக்கப்படுகிறது

வங்கிகள், சர்வதேசக் கம்பனிகள் போன்றவற்றில் வேலை செய்து வாய்ப்பாக கூலி பெறுபவர்கள் நுகர் பண்டங்கள் வாங்குவதிலும் கடன் பெற்று நிலம், வீடு போன்ற சொத்துகள் வாங்குவதிலும் ஈடுபட்டு தம் சிந்தனையை இச்சொத்துகளுடன் இணைத்துக்

கொண்டுள்ளனர். இதனால் புரட்சி அரசியலுணர்வு குன்றியும் காணப்படுகின்றனர்.

புரட்சியின் முன்னோடிகள் பாட்டாளிகளே. முன்னேறிய உற்பத்திச்சாதனங்களுடன் உழைப்பதனாலும் அத்துமீறிச் சுரண்டப்படுவதாலும் புரட்சிச்ரக்சிந்தனை, சமுதாயப் புரட்சிக்காகப் போராடும் அரசியல் உணர்வு கொண்டவர்களும் இவர்களே.

முதலாளித்துவம் முழுமையாக வளர்ச்சியடையாத காலகட்டத்திலும் இவர்களது புரட்சிப் பங்களிப்பு முதன்மையானதே. கிராமப்புறப் பாட்டாளிகளும் இவர்களது சித்தாந்தத்தையும் தலைமையையும் ஏற்று போராட்டத்தில் இறங்குவதன் மூலமே அரை நிலப்பிரபுத்துவ அரைக்காலனி நாடுகளில் புதிய ஜனநாயகப் புரட்சியை முதலில் ஏற்படுத்த முடியும்.

புதிய ஜனநாயகப் புரட்சியின்போது இன்று அடக்கி ஒடுக்கப்படும் வர்க்கங்கள், பாதிப்புற்ற வர்க்கங்கள் அனைத்தும் பாட்டாளிகளின் தலைமையில் ஒன்று திரண்டு போராடுவர்.

புதிய ஜனநாயகப் புரட்சியைத் தொடர்ந்தே பாட்டாளிகளின் தனித் தலைமையிலான சோஷலிசப் புரட்சிக்கு சமுகத்தை இட்டுக் செல்ல முடியும்.

தொழிலாளர்களின் பல வேலை நிறுத்தங்களை பார்த்திருப்பாய். திடீரென போக்குவரத்துகள், பண்ட விற்பனைகள், தொழிற்சாலைகள், மின்சாரம் எல்லாம் நின்றுவிடும். தொழிலாளர்கள் ஒன்று திரண்டால் சமுகத்தையே ஸ்தம்பிக்கச் செய்ய முடியும். அவர்கள் எத்தனை சக்தி படைத்தவர்கள் என்று பார்த்தாயா? அவர்களால் இன்றைய சமுக அமைப்பையே மாற்றி அமைக்க முடியும். என்றோ ஒருநாள் செய்யவே போகிறார்கள். இது உறுதி; சமுக வளர்ச்சியின் நியதி.

உன் அன்பான,
அப்பா

# 9. முதலாளிகள் - தேசிய முதலாளிகள்

அன்பான மானே,

முதலாளிகள் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டவர்கள்; தொழிலாளர்களின் உழைப்புச்சக்தியைக் கூலிக்கு வாங்குபவர்கள்: மூலதன வாய்ப்புள்ளவர்கள்; இவர்களே முதலாளிகள் என முன்னரும் படித்திருப்பாய். தொழிலாளரின் உபரி உழைப்பை அபகரித்து இவர்கள் மேலும்மேலும் மூலதனத்தைப் பெருக்கிக் கொண்டேயிருப்பர். முதலாளித்துவ சமுதாயத்தில் இவர்களுக்கும் தொழிலாளருக்கும் இடையில் ஏற்படுவதே பிரதான முரண்பாடாகும். முரண்பாடு ஏற்பட மூலதனத்தில் ஒரு பகுதியை யந்திரமயமாக்குவர் அல்லது யந்திரத்தின் தொழில் நுட்பத்தை விரிவாக்கித் தொழிலாளரை வேலையிலிருந்து நீக்குவர். தொழிலாளர் ஒன்று திரண்டு போராடுவர். இதன் மூலமே போராட்டம் வலுவடைந்து தொழிலாளர்கள் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் சமூக உடமையாக்குவர். அதுவே சோஷலிசப் புரட்சி. மார்க்சிய சித்தாந்தம் இவ்வாறே கூறுகிறது.

முதலாளிகளை இருவகைப்படுத்தி, முதலாவதாக உள்நாட்டுத் தேசிய முதலாளிகள் பற்றியே கூறப்போகிறேன். தரகு முதலாளிகள் என்பவர் அந்நிய நாடுகளின் மூலதனத்தையும் தொழில் நுட்பத்தையும் சார்ந்திருக்கும் முதலாளிகள். அவர்களைப் பற்றிப் பின்னர் கூறுவேன்.

தேசிய முதலாளிகள் என்போர் உள்நாட்டு மூலதனம் தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்டு யந்திர உற்பத்தியில் ஈடுபடுபவர். தமது உற்பத்திப் பண்டத்தைத் தமது தேசம் பூராவும் விற்று வளர்ச்சியடைவர். இவர்கள் தம்

தேச எல்லைக்குள் வெளிநாட்டாரின் பண்டங்கள் நுழை வதைத் தடுப்பர் அல்லது கட்டுப்படுத்துவர்.

தேசத்தின் அரசியலாதிக்கத்தை இவர்களே தம் கையில் வைத்திருப்பர். தம் பரம்பரை பரம்பரையான தேச எல்லை களைக் காப்பாற்றிக் கொள்வர். தம் தேசத்தின் பொது மொழியைப் பேணுவர். பொதுப் பொருளாதார வாழ்வை அபிவிருத்தி செய்வர். தம் தேச மதத்தைப் பேணி வளர்ப்பர். தம் தேச கலை, இலக்கியங்கள், கலாச்சாரங்களைப் பேணி, வளர்ப்பர், மேற் கூறியவற்றில் ஒன்றாயினும் வெளிநாட்டா ரால் பாதிக்கப்படும்போது போர்க்கொடி தூக்குவர்.

உள்நாட்டில் தேசிய முதலாளிகளின் முதல் எதிரி நிலப் பிரபுக்களாகும். இவர்களது ஆதிக்கத்தை உடைத்தெறி வதில் தேசிய முதலாளிகள் முன்னிற்பர். நிலப்பிரபுத்துவத் தின் பிற்போக்குத்தனம் ஆகியவற்றை தேசிய முதலாளி கள் அழிக்க முயல்வர், நிலமானிய உற்பத்தி முறைகளை தகர்த்து முதலாளித்துவ முறைகளைப் புகுத்துவர். எல் லோரையும் நில அடிமைத்தனத்திலிருந்து கூலியடிமைத் தொழிலாளர்களாக மாற்ற முயல்வர். ஏனெனில் அவர் களது உபரி உழைப்பை அபகரிப்பதன் மூலமே முதலாளிகள் தம் மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும்; நிலப் பிரபுக்களை ஒழித்து தம் அரசியலாதிக்கத்தை நிறுவமுடியும்.

தமது ஆட்சியை நிலை நாட்டுவதற்கும் நிலப் பிரபுத் துவத்தை ஒழிப்பதற்குமாக மக்களுக்கு முன்னர் கிட்டா திருந்த சில ஜனநாயக உரிமைகளை வழங்குவர். வயது வந்தோருக்கு வாக்குரிமை வழங்கி, தேர்தல் மூலம் பாராளு மன்ற ஜனநாயகம் போன்ற அமைப்புகளை ஏற்படுத்துவர்.

தொழிலாளர்களுக்குத் தொழிற் சங்க உரிமைகள், தமது வர்க்கம் பாதிக்கப்படாதவரை, வழங்குவர்.

தனிச் சொத்துடைமையும், தனிஉரிமையும், எவற்றிலும் போட்டி ஏற்படுத்துவதும் இவர்களது தனிச் சித்தாந்த மாகும்.

முதலாளிகள் நிலப்பிரபுக்கள் போலல்லாது விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்வர். யந்திர உற்பத்தி தொடக்கம் நில உற்பத்தி வரை நவீன விஞ்ஞான முறை களைப் புகுத்துவர். தூய்மை, ஒழுங்குமுறைகளை எல்லாப் பகுதிகளிலும் புகுத்துவர். எல்லாப் பகுதிகளுக்கும் சீருடை முறைகளைப் புகுத்துவர்; பொலிஸ் இராணுவம், நர்சிங், டிரைவர், மாணவர் ஈறாக சீருடையைப் பார்க்கலாம்.

சட்டவாக்கம், நிர்வாகம், நீதி வழங்கல் ஆகிய துறை களைத் தனிமைப் படுத்தும் ஆட்சிமுறை அமைப்பர். நீதி வழங்குவதை மூன்றாவது நபரான நீதிபதிகளின் பொறுப் பில் விடுவர். நிலப்பிரபுத்துவத்தில் நீதி நேரடியாக நிலப் பிரபுவால் வழங்கப்படும்.

தமது வளர்ச்சிக்கு வேண்டியபடியான கல்வி முறைகளை அமைப்பர். தொழில் நுட்பம், விஞ்ஞான ஆய்வு, நிர்வாகம், மருத்துவம், கணிதம் ஆகிய துறைகளில் தேவைக்கு அதிக மாகவும் பயிற்றுவித்து, கூலிச் சந்தையை நிரப்பிவைத்து தமது தேவைக்கேற்ப மலிவாக உழைப்பை வாங்கும் வழி களை ஏற்படுத்துவர்.

எப்பொழுதும் வேலை யற்றவர்களாக ஒரு பகுதியினரை வைத்திருப்பர். இதன் மூலமே முதலாளித்துவ உற்பத்தி முறை, உபரியை அபகரிப்பதாக இயங்க முடியும். வேலை யற்றவர் பட்டினி கிடக்கவும் சுதந்திரமுண்டு. நிலப் பிரபுத்துவத்திலுள்ள நேரடி மனித உறவு இங்கு கிடையாது.

மனித உறவுகள் பண்ட உறவுகளாகின்றன. மனித உழைப்புச் சக்தியும் முதலாளித்துவத்தில் பண்டமாகின்றது. இதை முன்பும் படித்திருப்பாய்.

தமது வளர்ச்சிக்கும் நலனுக்குமேற்ற முதலாளித்துவத் தில் ஓரளவு திட்டமிட்ட உற்பத்தி முறை உண்டு. அது மக்களின் அடிப்படைத் தேவையிலும் பார்க்க லாப நோக்

கானது. தொழிலாளரின் உபரி உழைப்பை எத்தனை மோச மாக அபகரிக்க முடியுமோ அத்தனை வேகமாக அபகரிக்க முயல்வர்.

நிலப் பிரபுத்துவத்திலும் பார்க்க முதலாளித்துவம் முற் போக்கானது.

முதலாளித்துவம் மனித உழைப்புச் சக்தியையே பண்ட மாக்கி விடுகிறது. மூலப் பொருட்களை வாங்குவதுபோல தொழிலாளரின் உழைப்புச் சக்தியையும் கூலிக்கு வாங்கி பண்டமாக்கி ஒய்வாக லாபத்திற்கு விற்கிறது. அடுத்து மக்களையெல்லாம் கூலியடிமை ஆக்கிவிடுகிறது. தனிச் சொத்து, தனிஉடைமையையும் காப்பாற்றி உற்பத்தியில் ஈடு படுகிறது. இலாபநோக்கு தவிர, சமுதாயத் தேவைகளை ஒட்டிய உற்பத்திமுறை கிடையாது. ஆகையால் முதலாளித் துவ சமுக அமைப்பை உடைத்தெறிவதே மனித குலத்தின் முக்கியப் பணியாக இருக்கமுடியும்.

தேசிய முதலாளிகள் என்ற வர்க்கத்தவர் மேற்கூறிய குணாம்சங்கள் எதற்கும் விலக்கானவர்கள் அல்லர். ஆயினும் இலங்கை, இந்தியா போன்ற மூன்றாவது உலக நாடுகளில் இவர்கள் வளர்ச்சியடைய முடியாதபடி தரகு முதலாளிகள் என்ற வர்க்கத்தவர் நந்திபோல உள்ளனர். அவ்வர்க்கம் பற்றி இனிப் பார்ப்போம்.

அன்புடன்,
அப்பா

# 10. தரகு முதலாளிகள் - சார்பு முதலாளிகள்

அன்பான மான்விழிக்கு,

தரகு முதலாளிகள் என்போர் ஒருகாலத்தில் வெளி நாட்டுப் பண்டங்களை இறக்குமதி செய்து உள்நாட்டில் விற்றவராவர். பிரெஞ்சு, ஆங்கில மொழி வழக்கின்படி இவர்கள் விற்பனை மூலம் கமிஷன் பெறும் ஏஜெண்டு களாவர். உதாரணமாக டாட்டா என்ற பிரபல இந்தியக் கம்பனி ஜேர்மனியில் தயாரிக்கப்பட்ட பென்ஸ் கார், லாரி களை இறக்குமதி செய்து இந்தியாவில் விற்று வந்தது, இந்தி யாவில் விற்கவேண்டிய விலையை ஜேர்மன் கம்பனியே தீர் மானிக்கும். விற்பனைத் தொகைக்குத் தக்கபடி பென்ஸ் கம்பனி இந்திய டாட்டா கம்பனிக்கு கமிஷன் வழங்கும், உதாரணமாக ஓராண்டில் 100 கோடி ரூபாவிற்கு விற்பனை செய்தால் கமிஷன் 5 கோடி ரூபா வரை கிடைக்கலாம்,

இப்படியாக யந்திரப் பண்டங்களை உள்நாட்டில் உற் பத்தி செய்யாது வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்து உள்நாட்டில் விற்பதன் மூலம் ஏராளமான முதலாளிகள் இலாப முழைத்து வந்தனர். இம்முதலாளிகள் அரசியலாதிக் கமும் பெற்று வந்தனர்.

'இந்தியச் சுதந்திரத்தின்' பின்னர் உள்நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகக் கூட்டுக்கம்பனி முறை கொண்டு வரப்பட்டது.

இதன்படி ஜேர்மன் பென்ஸ் கம்பனியின் தொழில் நுட்பம், மூலதனத்துடன் டாட்டாவும் 51 சதவீதத்திற்குக் குறையாது மூலதனமிட டாட்டா பென்ஸ் லாரிகள் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. முன்னர் கமிஷன் பெற்ற டாட்டா தற்போது இலாபத்தில் ஒரு

பங்கைப் பெறுகிறது. இவ்வேளையும் பென்ஸ் கம்பனியின் ஆதிக்கத்திலேயே உற்பத்தி நிகழ்வதால் நாம் தரகுமுதலாளி எனவே இன்றும் டாட்டாவை அழைக்கிறோம். டாட்டா ஏறக்குறைய 15க்கு மேற்பட்ட சர்வதேசக் கம்பனிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

ஓரளவு உள் நாட்டு மூலதனமும், முழு உள்நாட்டு உழைப்புச் சக்தியும் இக்கூட்டு உற்பத்தியில் பயன்படுத்தப் படுவதால் இத்தரகு மூதலாளிகளை சிலர் 'சார்பு முதலாளிகள்' என்றும் இன்று கூறுவர். இரண்டு வார்த்தைகள் மூலமும் ஒன்றையே நாம் கருதுகிறோம், வெளி நாட்டுத் தொழில் நுட்பம், வாணிபச் சின்னம், சர்வதேச வாணிபப் பெயரின் மதிப்பும் உரிமையும் ஆகியன ஆதிக்கம் செலுத்தவே செய்யும்.

இந்திய யந்திர உற்பத்தியில் 33 சர்வதேசக் கம்பனி களும் 168 வெளிநாட்டுக் கம்பனிகளும் முதலிடம் வகிக் கின்றன. இவை தவிர 1984-வரை 8,000க்கு மேற்பட்ட கூட்டுக் கம்பனிகள் பண்ட உற்பத்தியில் ஆதிக்கம் செலுத்து கின்றன. 1983வரை 7600 கூட்டுக்கம்பனிகள் பதிவா யுள்ளன ஆண்டு தோறும் 300க்கு குறையாத புதிய கூட்டுக் கம்பனிகள் இந்தியாவில் அனுமதிக்கப்படுகின்றன. 1980ல் 526 கூட்டுக் கம்பனிகளும் 1981ல் 389ம் 1982ல் 326ம் 1983ல் 383ம் அரசால் அனுமதிக்கப் பட்டுள்ளன என அரசின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. ஆயினும் இத்தனை கூட்டுக் கம்பனிகளும் சிக்கலான, பிரதான தொழில் நுட்பங்களை வளர்த்தெடுத்ததாகவும் கூறுவதற்கில்லை.

இவற்றில் வேடிக்கை என்ன வெனில் சாதாரணமாக உள் நாட்டு முதலாளிகளாலேயே உற்பத்தி செய்யக் கூடிய பல வகை நுகர் பண்ட உற்பத்திகளே சர்வதேசக் கம்பனி களின் ஆதிக்கத்தில் உள்ளன உதாரணமாக சோப், பவுடர், பற்பசை, பிரஷ், ஷாம்பு, கிரீம், டிற்ரஜென் சோப் பவுடர், சவர பிளேட், தலைவலி மாத்திரை போன்ற

நூற்றுக் கணக்கான சாதாரண நுகர்பண்டங்களை சர்வதேசக் கம்பனிகள் போட்டியிட்டு உற்பத்தி செய்து இந்தியாவில் விற்கின்றன. சினிமா தியேட்டரில் இவர்களது விளம்பரப் போட்டிகளை எளிதில் காணலாம். தலைவலி ஏற்படும் வரை இவற்றின் விளம்பரங்கள் காட்டப்படுகின்றன, தேயிலை, காப்பி போன்ற உள் நாட்டு விவசாயவிளை பொருட்களையே புருக் பொண்ட், லிப்டஸ்ன், நெசிலே போன்ற சர்வதேசக் கம்பனிகள் விநியோகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது வியப்பானது.

இத்தரகு முதலாளிகள் ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கின்றனர். இவர்கள் அரசியல் ஆதிக்கம் பெற்ற ஆளும் வர்க்கமாக உள் நாட்டில் உள்ளனர்; ஏகாதிபத்திய நாடுகள் தமது தொழில் நுட்பத்தையும் மூலதனத்தையும் விளையாட்டாக இந்நாட்டில் திணிக்கவில்லை தமது நாட்டிலும் பார்க்க இங்கு அதிக இலாபம் பெறுவதற்காகவே இங்கு கூட்டுச் சேர்ந்துள்ளன.

இந்நிலையால் உள் நாட்டில் தேசிய முதலாளிகள் வளரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தேசிய முதலாளிகள் என்போர் உள் நாட்டுத் தொழில் நுட்பம், உள் நாட்டு மூலதனத்தோடு யந்திர உற்பத்தியில் ஈடுபடுபவர்; தேசம் பூராவும் தமது உற்பத்திப் பண்டத்தை விற்பவர்கள். இவர்களது வளர்ச்சியின் மூலமே நிலப்பிரபுத்துவம் உடைய முடியும். குறைந்த மூலதனத்துடன் உற்பத்தியில் இறங்கும் போது பலருக்கு வேலை வாய்ப்பு வழங்க முடியும்; நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் மாற முடியும்.

தரகு முதலாளி பெருந்தொகை மூலதனத்துடன் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்துடன் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளான். இவனுடன் தேசியமுதலாளி போட்டிபோட முடியாத நிலைஉள்ளது. இந்நிலையால் உள் நாட்டுத் தொழில் வளம் பாதிக்கப் படுகிறது. வெளி நாட்டு யந்திரங்களுக்கு வேண்டிய மூலப் பொருட்களே பெரும்பாலும் கிராமங்களில்

உற்பத்தி செய்யப் பட்டன. இன்று தரகு முதலாளிகள் உள் நாட்டிலும் இவற்றைப் பண்டங்களாக்கி ஏற்றுமதி செய்கின்றன.

தரகு முதலாளிகளின் அரசியல் ஆதிக்கத்தை எளிதில் வீழ்த்தி விடமுடியாது. வெளி நாட்டு மூலதனம் உள் நாட்டு மூலதனத்துடனும் உழைப்புச்சக்தியுடனும்பின்னிப்பிணைந்து கிடக்கிறது. சீனாவிலும் இதே நிலையே நீடித்திருந்தது. தலைவர் மாவோ தொழிலாளர்களின் தலைமையிலான விவசாயப் புரட்சிமூலமே தரகு முதலாளித்துவத்தைத் தூக்கி எறிந்தார். இதையே புதிய ஜனநாயகப் புரட்சி என்றும் முன்னர் கூறினேன்.

அன்பு நிறைந்த,
அப்பா

# 11. சிறுபண்ட உற்பத்தியாளர் - குட்டி முதலாளிகள்

அன்பு மானுக்கு,

நடுத்தர விவசாயிகளின் வர்க்க நிலைபற்றி முன்னர் எழுதினேன். அதே போன்ற வர்க்க நிலையிலேயே சிறு பண்ட உற்பத்தியாளரும் உள்ளனர்.

குடும்பமாக சிறு சிறு தொழில்களில், உற்பத்தியில் ஈடு பட்டு, சந்தையை நாடி நிற்பவர்களே இவர்கள்; சிறு மூலதன மும் சில உற்பத்திக் கருவிகளும் கொண்டு பல்வேறு தொழில் களில் ஈடுபட்டுள்ளவர்கள். தச்சர், கொல்லர், பொற் கொல்லர், பப்படம் பலகாரம் செய்வோர், ரிப்பேர் செய் வோர், வீட்டில் கைத்தறி வைத்திருப்போர், சொந்தப்படகில் மீன்பிடிப்போர், சலவைத் தொழில், சிகை அலங்கரிப்பு செய் வோர், டீக்கடை, சிறு மளிகைக்கடையாளர், காய்கறி விற் போர், கலைஞர்கள், ஆகியோரைக் குறிப்பிடலாம் இவர் கள் சமூகத்தில் குறிப்பிடத்தக்க தொகையினர்.

இவர்களும் சமூக உற்பத்தியில் அல்லது சேவை வழங்கு வதில் தான் ஈடுபட்டுள்ளனர், நடுத்தர விவசாயி தான் உற் பத்தி செய்யும் நெல் முழுவதையும் தானே நுகர்வதில்லை வீட்டில் கைத்தறி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் நெசவாளி நெய்யும் துணியாவையும் தானே உடுத்து விடுவதில்லை. பெரும் பகுதியையோ, ஒருபகுதியையோ சந்தையில் விற்று தன் தேவைக்கு வேண்டிய பிற பண்டங்களை வாங்கிக் கொள்கிறான். ஆகவே இவனும் சமூக உற்பத்தியிலேயே ஈடுபட்டுள்ளான்.

சிறுமூலதனம் சில உற்பத்திக் கருவிகளைக் கொண்ட தனாலும் சந்தையால் சுரண்டப்படுவதை உணர முடியாத தினாலும் எதிரியை இனங்காண முடியாத நிலையினாலும்

இவனிடம் புரட்சிகர உணர்வு மிகக் குன்றியே இருக்கும். குட்டி முதலாளித்துவ வர்க்க நிலையுள்ளவனாகவே இருப்பான். ஒரு பக்கமாக முதலாளியாக வளர்ந்து வர ஆசைப் படுவான். ஆனால் முதலாளித்துவ வளர்ச்சியில் இவன் பாதிக்கப்படவே செய்வான், சிறு மீன்களைப் பெரிய மீன் விழுங்கும். சமுக அமைப்பில் சிறு உற்பத்தியாளர் பாதிக்கப் பட்டு கூலிகளாக மாற நேரிடும்.

என்றும் வளர முடியா நிலையில் தேய்ந்து துன்பத்தில் உழலும் பெரும் பகுதியினர் அரசுக்கு, ஆளும் வர்க்கத்திற்கு எதிராக புதிய ஜனநாயகப் புரட்சியின் போது தொழி லாளர், விவசாயிகளுக்கு ஆதரவாக நிற்பர்.

சோஷலிசப் புரட்சியின்போது இச்சிறு பண்ட உற்பத்தி யாளர் எதிரிகளாக இருந்தனர் என்பதை லெனின் பல தடவை வலியுறுத்திக் கூறியுள்ளார். ஆயினும் மாவோ தமது புதிய ஜனநாயகப் புரட்சியின்போது இவர்களையும் நேச சக்தியாகச் சேர்த்து வெற்றிகண்டார். தரகு முதலா ளித்துவம் ஆளும் வர்க்கமாக இருக்கும் காலகட்டத்தில் இச் சிறு பண்ட உற்பத்தியாளர் வளரமுடியாது தேயும் நிலையில் இருப்பதால் அரசின்மேல் பகைமை ஏற்படவே செய்யும். இப்பகைமை உணர்வை பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை என்பதே மாவோவின் புதிய ஜனநாயகப் புரட்கியின் கோட்பாடு.

இன்றையத் தரகு முதலாளித்துவ ஆதிக்க வளர்ச்சியில் கைத்தறி உற்பத்தியாளர், உள்ளூர் சோப்பு தயாரிப்போர், கட்டுமரத்தில் மீன் பிடிப்போர், சட்டி பானை வனைவோர், மருந்துச் சரக்கு தயாரிப்போர், மாட்டுவண்டி வைத்துப் பிழைப்போர் இத்தியாதிப் பேரெல்லாம் எப்படிப் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதைக் கண்முன்னே காண்கிறோம்.

தரகு முதலாளிகள் ஏகாதிபத்தியங்களின் சர்வதேசக் கம்பனிகளுடன் இணைந்து உள் நாட்டின் சிறு தொழில்களை யெல்லாம் நசுக்கி வருகிறார்கள். யந்திர உற்பத்திப்

பண்டங்களைப் புகுத்தி உள் நாட்டு கைப்பணி, கலைப் பொருள் உற்பத்திகளையெல்லாம் அழித்து வருவதைப் பார்க்கிறோம்.

இவ்வாறான நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்டு கூலி களாக மாறி வரக்கூடிய சிறு பண்ட உற்பத்தியாளர்களையும் பாட்டாளிகள் நேச சக்தியாக சேர்த்துக் கொள்ளவேண்டும். புதிய ஜனநாயகப் புரட்சியின் பின்னர் இக்கலைஞர்களின் தனிச் சிறப்புகளைச் சோஷலிச சமுதாயம் மதிப்பளித்துப் பயன்படுத்திக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

நடுத்தர விவசாயி, சொந்தப் படகுவைத்து மீன் பிடித்து வாழும் மீனவர், சொந்தத் தறிவைத்து குடும்பமாக உழைக்கும் நெசவாளர் ஆகியோரிடம் புரட்சி உணர்வு குன்றியே காணப்படும். சுரண்டும் வர்க்கங்களால் பாதிக்கப் பட்டு ஏழ்மை நிலை, கூலி அடிமை நிலை அடையும் வேளை இவர்களும் புரட்சிக்கு ஆதரவு அளிக்க முன்வருவர்.

அன்பான,

அப்பா

# 12. வேலை யற்றவர்கள் - அரைப் பாட்டாளிகள்

அன்பு மான்விழிக்கு,

வேலை யற்றவர்களின் வர்க்கத்தை உறுதிப்படுத்துவதில் சில சிரமங்கள் உள. ஏனெனில் உற்பத்தியில் ஈடுபடுவதை வைத்தே நாம் இதுவரை அனைவரது வர்க்கத்தையும் தீர்மானித்து வந்தோம், இங்கு வேலையற்றவர்கள்' உற்பத்தியில் ஈடுபடாதவர்களாக உள்ளனர். ஆனால் அவர்கள் உற்பத்தியில் ஈடுபடத் தயாராக உள்ளனர். ஆனால் உழைப்பில் ஈடுபட வாய்ப்புத்தான் அளிக்கப்படவில்லை. அது அவர்களின் குற்றமல்ல. இன்றைய சமூக அமைப்பின் குறையாகும்.

உற்பத்திச் சாதனங்கள், நிலம் நீர் யந்திரம் முதலியன, ஒரு சிலரின் ஆதிக்கத்தில் உள்ளன. இலாபம் சேர்ப்பதே அவர்களது முழு நோக்கமாக உள்ளது. குறைந்த கூலியில் உழைப்பை வாங்குவதற்கு ஒரு பகுதியினர் வேலையில்லாதவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் முதலாளித்துவ அமைப்பு நிலைபெற முடியும் என முன்னரும் தெரிவித்தேன். செல்வம் கொழிக்கும் நாடு எனக் கூறப்படும் அமெரிக்காவிலேயே உழைக்கக்கூடிய பகுதியினரில் 10 சதவீதத்திற்கு மேற்பட்டவர் வேலை யற்றவர்களாகத் துன்பப்படுகின்றனர்.

வேலையற்றவர்கள் உழைப்பு இல்லாது துன்பப்படுவது மட்டுமல்ல; அவர்களது உழைப்பை நாடும் முழுச் சமுகமும் இழந்து கொண்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடப்படாது.

படித்தவர்கள் யாவரும் தமது உழைப்பு நேரத்தைக் கூலியடிமைச் சந்தையில் விற்பதற்குத் தயாரானவர்களே

யாவர். பள்ளியில், கல்லூரிகளில் அவர்கள் கற்கும் வேளை யிலேயே அதையொட்டி வேலை தேடுபவர்களாகவும் இருக் கிறார்கள். ஆகவே அவர்கள் பாட்டாளிகளின் நிலையை அடைய தவங் கிடப்பவர்களே. அவர்களது சிந்தனை அவ்வாறே வளர்க்கப்பட்டுள்ளது. அதனாலேயே அவர் களை அரைப்பாட்டாளிகள் எனக் கூறுகிறோம்.

கல்வி கற்காது உடலுழைப்பை விற்கக் காத்திருப்பவர் களும் அரைப் பாட்டாளிகளே. வாழ்க்கைக்கு இவர்களுக்கு வேறு வாய்ப்பு எதுவுமில்லை. உழைப்பு சக்தியை விற்றே வாழ வேண்டியவர்களாவர்.

வேலையற்ற இவ் அரைப் பாட்டாளிகள் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதில் முன்நிற்கும் ஒரு பெரும் படையாவர். இப்படை வளர்வதைக் கண்டு அரசுகள் அஞ்சுவதைக் காணலாம்.

பாட்டாளிகளின் கீழ் அணி திரண்டு போராடுவதைத் தவிர வேலையற்றோருக்கு வேறு வழிகிடையாது. தொழிற் சங்கங்களிலிருந்து வேலை நீக்கப்பட்டோர், ஆட்குறைப்பு, கதவடைப்பு போன்றவற்றால் வேலையிழந்தோரும் இந்த அணியையே சேர்ந்தவராவர். முதலாளித்துவத்தால் விரட்டப்பட்ட சூழலில் பாதிக்கப்பட்ட உணர்வு நிலையில் புரட்சிக்குத் துணையாகப் போராடும் சகல தகுதிகளும் இவர்களுக்குண்டு.

நிரந்தர வேலையற்றவர்கள், சந்தர்ப்ப வேலையாட்கள் **(casual)**, போதிய வேலையற்றோர் **(underemployed)**, பகுதி நேர வேலையாளர் **(part time employed)** ஆகியோரும் ஏறக்குறைய அரைப்பாட்டாளி நிலையிலேயே கொள்ளப் படக்கூடியவர். முன்னேறிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பாட்டாளிகளது நிலையில் இவர்களை நாம் கணித்துவிட முடியாது. கிராமப்புறங்களில் இத்தகையத் தொழிலாளர் பெரும்பாலாக உள்ளனர். முன்னர் கிராமப்புறப் பாட்டாளி கள்ப எழுதிற்றியிருந்ததைப் படித்திருப்பாய். கிராமப்புறப்

பாட்டாளிகளின் குறைபாடுகளும் இவையேதான். விதைப்பு, களை எடுத்தல், அறுவடைக் காலங்களிலேயே இவர்களுக்குப் போதிய வேலை கிடைக்கும். மற்றைய காலங்களில் சந்தர்ப்ப வேலை தேடுவர். கிடையாத போது பட்டினியிருப்பர். பலர் நகரங்களைத் தேடிச் சென்று தற்காலிக வேலை தேடுவதுண்டு. உதிரிப் பாட்டாளியாகப் பெரும்பாலும் மாறுபவர்களும் இவர்களே. இவர் பற்றி விபரமாகப் பின்னர் எழுதுவேன்.

வேலையற்றோரை வர்க்கம் பிரிக்கும் போது பெற்றாருடைய வர்க்கத்தையும் நாம் கவனித்துக் கொள்ளவேண்டும். இவர்களது பெற்றார் சிறு பண்ட உற்பத்தியாளராக, குட்டி முதலாளிகளாக இருக்கலாம். படித்த மகனிடம் இவர்களது வர்க்க சுபாவம் மேலோங்கியிருக்கலாம், பெற்றாரின் தொழிலுடன் ஈடுபட நேரின் அவர் வர்க்க குணாம்சமே முதன்மை பெறும். பெற்றாரிடமிருந்து பிரிந்து கூலியடிமையாக வேறு இடத்திற்குச் செல்லும்போது வர்க்க நிலையும் மாறவே செய்யும். சொத்துரிமை அவர்களது வர்க்க நிலையை புரட்சி நிலையிலிருந்து கீழே இறங்கிவிடும்.

வேலையற்றோர் வேலை பெற்றதும் தொழிலாள வர்க்கத் தவராகின்றனர். ஆயினும் ஒரு பகுதியினர் குட்டி முதலாளித்துவ உணர்வு நிலைக்கு மாறுவதையும் காண்கிறோம். ஆகவே வேலையற்றவர்கள் வேலையற்ற நிலையிலிருக்கும் வரையிலேயே புரட்சியாளர்களாக பெரும்பாலும் இருப்பர், வேறு உற்பத்தி உறவில் ஈடுபட்டதும் இந்நிலையில் மாற்றம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதை நாம் மறந்து விடப்படாது.

அன்புடன்.
அப்பா

# 13. மாணவர்கள் - அரைப் பாட்டாளிகள்

அன்பான மானே,

இன்று மாணவர் நிலையில் நீயும் இருப்பதால் இக்குழு வினரின் வர்க்க ஆய்வு பற்றி அறிய ஆர்வமாயிருப்பாய். வேலையற்றவர்கள் உற்பத்தியில் ஈடுபட தயாரிக்கப்பட்டவர் கள். மாணவர்கள் தயாரிக்கப்படும் நிலையிலுள்ளவர்கள். வேலையற்றவர் விற்பனைக்காகச் சந்தைக்கு வந்த பண்ட மாயின் மாணவர்கள் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நிலையில் உள்ள பண்டமாகும்.

உன் வகுப்புச் சக மாணவ, மாணவியர் யாவரும் கல்வியை முடித்து எங்காவது நகரத்தில் வேலை தேடவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களாகவே இருப்பர். தமது கல்வி விஞ்ஞானப்பகுதியா, கலைப்பகுதியா என்பதை யொட்டி தாம் விரும்பும் வேலையையும் தீர்மானித்துக் கொள்வர் ஆகவே நினைவு பூர்வமாக அவர்களில் பெரும்பாலோர் மாதச்சம்பளம் பெறும் கூலி உழைப்பை நாடுபவர்களே. இதனால் மட்டுமே அவர்கள் அரைப்பாட்டாளி நிலையை எட்டுபவர்களாக இருப்பர்,

ஆயினும் பெரும்பாலும் மாணவரின் வர்க்கத்தை பெற்றாரின் வர்க்கத்தை வைத்தே தீர்மானிக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் பெற்றாரின் உற்பத்தி உறவை ஒட்டியே பிள்ளைகளது உணர்வு நிலையும் இருப்பது வழமை. பின்னர் உலகத்தையும், சமுக ஏற்றத் தாழ்வுகளையும் அவர்கள் கல்வி மூலமும் அனுபவ மூலமும் அறியத் தொடங்குவர்.

மாணவரின் காலம் காலை இளம் சூரியனின் நிலை போன்றது. இக்கால கட்டத்தில் மாணவர் கட்டிலடங்கா

உணர்ச்சி யுடையவரா யிருப்பர். எதையும் உடனே சாதித்து விடமுடியும் எனச் செயலில் ஈடுபடத் துடிப்பர்.

இன்றைய உலகில் மாணவர்கள் மிகப் பெரும் சக்தியாக உள்ளனர். முதலாளிகள் தமது யந்திரங்களையும் அரசு யந்திரத்தையும் இயக்க கல்வியை விரிவு படுத்துகின்றனர், மாணவர் கல்விக் காலத்திலேயே தமது எதிர் காலச் சூனியத்தையும் காண்கின்றனர். கல்வியால் தமக்கு விடிவுகிட்டாது என்பதையும் அறிகின்றனர். கல்லூரியை விட்ட சக மாணவர் வேலை தேடும் சந்தைப் போட்டியில் ஈடுபட்டு துன்பப் படுவதையும் பார்க்கின்றனர். போராடுவதே தமக்கு ஒரே வழியெனத் தேர்ந்து அரசியல் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். இதையொட்டி கல்லூரிகள், பல்கலைக் கழகங்களை அரசு அடிக்கடி மூடுவதைக் காண்கிறோம்.

கல்லூரிகளில் ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம் அடிக்கடி நடைபெறுகிறது. அரசும் அவர்களது காவற் படையினரும் மாணவ சமுகத்தவருக்கு அஞ்சுவதைக் காண்கிறோம்.

ஆகவே மாணவர்கள் சமுகப் புரட்சியில் முக்கிய பங்காற்றக் கூடியவர். பாட்டாளி வர்க்கம் புரட்சிக்குத் தலைமை தாங்கும் வேளை இவர்களின் வர்க்க நிலையைக் கருத்திற்கொண்டு. அரவணைத்துப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

மாணவர் உலகை இன்று அச்சுறுத்தும் இரண்டு முரண்பாடுகள் உள. ஒன்று உயர் கல்வி வாய்ப்பின்மை. இரண்டாவது கல்வி முடிந்தபின் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம்.

இலங்கையில் இன்று படித்த வேலையில்லாதவர் தொகை 20 இலட்சமாக வளர்ந்துள்ளது. இது உழைக்கக் கூடிய நிலையில் உள்ளவர்களில் (15–60) 20 சதவிகிதத்தவராவர். பல்கலைக் கழகத்தில் நுழைவதற்கு ஒன்றரை

இலட்சம் பேர் போட்டியிடும் வேளை 5000 இடங்களே நிரப்ப வாய்ப்புள்ளது. மிகுதியான 145,000 பேரும் வேலையில்லாதவர் படையில் சேர நேரிடுகிறது. ஆகவே சமுதாய மாற்றத்தில் இவர்களுக்கு முக்கியப் பங்குண்டு.

இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமல்ல ஏகாதிபத்திய நாடுகளிலும் மாணவர்கள் இன்று புரட்சிகர உணர்வுடனேயே வளர்ந்து வருகின்றனர். சமூகச் சூழலும், கல்வியும், உலக அறிவும் எதிர்காலம் பற்றிய பயங்கர நிலையும் அவர்களைப் புரட்சியில் ஈடுபடச் செய்கின்றன.

இலங்கையில் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் மாணவர்கள் பெரும் பங்காற்றுவதைப் பார்க்கிறோம். மாணவியரே கல்வியை விட்டு ஆயுதம் ஏந்த முன்வரும் காட்சியைக் காண்கிறோம்.

குட்டி முதலாளித்துவ நிலையிலேயே நீ வளர்க்கப் பட்டாய். ஆயினும் இன்று உன் சகமாணவர் மாணவியரின் கஷ்டங்கள், எதிர்காலம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு அரசியலையும் நீ கற்க வேண்டும். சமூகப் புரட்சி ஒன்றே யாவுக்கும் விடிவு தரக்கூடியது என்பதை கருத்திற்கொள்ள வேண்டும். அத்தகையப் போராட்டத்தில் நீயும் முன் நிற்க வேண்டும் என்பதே என் அவா. என் வாழ்த்துகள்,

அன்பின்,

அப்பா

# 14. உதிரிப் பாட்டாளிகள் - லும்பன்கள்

அன்பு நிறைந்த மானுக்கு,

உதிரிப் பாட்டாளிகள் என்போர் மிக வேடிக்கையான வர்க்கத்தவர், வர்க்க நிலை என்பது அவரவர் கட்டுப் பாட்டில் இல்லாதது. உயிர்வாழ்தலே மனிதனது முதல் நிலையாகிறது. அதற்காக ஏதாவது தொழில் செய்ய வேண்டும். உற்பத்தியில் ஈடுபடவேண்டும். சமூகத்தில் நியாய மான தொழில் செய்து பிழைக்க முடியாத நிலை ஏற்படும் போது சட்டவரம்புகளை மீறிய தொழிலில் ஒரு பகுதியினர் ஈடுபடுகின்றனர். இவர்களே உதிரிப்பாட்டாளிகளாவர். இவர்கள் சமூகத்தாலும் சட்டத்தாலும் வஞ்சிக்கப் பட்டவர்கள். நினைவு பூர்வமாகவே சட்டவிரோத நடவடிக் கைகளில் ஈடுபடுபவர்கள் இதனால் தண்டிக்கப்பட்டு சிறையில் வாழும் பெரும் பகுதியினரும் இவர்களே.

சமுதாய மாற்றத்திற்கு, புரட்சிக்கு இவர்கள் என்றும் துணையாயிருப்பர் இவர்களைப் புரட்சிக்குத் தலைமை தாங்கும் பாட்டாளி வர்க்கம் தக்கமுறையில் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். போதிய அரசியலறிவு வளராதபோது சுயநலத்திற்காகப் புரட்சியாளரைக் காட்டிக் கொடுக்கக் கூடிய வர்களும் இவர்களில் இருப்பர்.

நகரங்களை ஒட்டி வாழ்ந்து இருடிப் பிழைப்பவர்கள். பொய்பேசி ஏமாற்றிப் பிழைப்பவர், கள்ளச் சாராயம் காய்ச்சிப் பிழைப்போர், விபசாரிகள், கள்ளக்கடத்தல் சூரர், இக்குற்றங்களுக்காக அடிக்கடி சிறை சென்று வருபவர்கள் ஆகியோரையே உதிரிப் பாட்டாளியாகக் கொள்கிறோம்.

பஸ், ரெயில் நிலையத்திலிருந்து பெட்டிகளைத் தூக்கி வந்து அதிக கூலிகேட்டு சண்டைக்கு வருபவர்களை நீ கண்டிருப்பாய். சயிக்கிள் ரிக்ஷா, ஆட்டோவில் ஏற்றி வந்து வீட்டில் இறங்கியதும் பேரம் பேசியதொகை, மீட்டர் தொகைக்கு மேலாகக் கூலிகேட்டு பலத்த சத்தம் போட்டு திட்டி அதிக்கூலி வாங்க முனைபவர்களையும் நீ பார்த்திருப்பாய். ஏனப்பா இவர்கள் இவ்வாறு பொய் பேசி ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்று சில வேளைகளில் நீ கேட்டது நினைவு வருகிறது. நான் இவர்களது செயல்களைக் கண்டு ஆத்திரமடைவதில்லை. மனதுள் சிரித்துக் கொள்வேன். ஏனெனில் இவர்களது வர்க்க குணாம்சம் இதுவே யாகும். அது இவர்களது வாழும் முறையால் ஏற்பட்டதாகும். இவர்களைத் திட்டி பிரச்சனை தீரப் போவதில்லை. இவர்களே முன்னர் கூறிய உதிரிப் பாட்டாளிகள். நிரந்தரமாக இவர்கள் ஒரு தொழிலிலும் இருப்பதில்லை. நிரந்தர தொழில் கிடைப்பதுமில்லை. ஆகவே தொழில் கிட்டும் போது இவ்வாறு ஏமாற்றிப் பிழைக்க முயல்வார்கள். இனி மேல் இப்படிப் பட்டவர்களைக் காணும்போது இவர்களது வர்க்க நிலையை உணர்ந்து, நீயும் சண்டை போடாது சமாளித்துக் கொள்வாய்.

இதே போலவே விபசாரம் செய்து வாழும் நிலை ஏற்பட்டுள்ள பெண்களைப் பார்த்து கேவலமாகப் பேசாதே: ஒதுக்கிவிடாதே அவர்களது வர்க்க நிலையை உணர்ந்து அவர்களுக்கு எத்தகைய சமுக அமைப்பில் விடுதலை கிடைக்கும் என்பதை எண்ணிப்பார்.

இன்றைய சமுக அமைப்பில் எவரும் தாம் விரும்பிய படியான உற்பத்தியில், உழைப்பில் ஈடுபட முடியாது. உன்னோடு படிக்கும் மாணவ, மாணவியரின் நிலையும் அவ்வாறே. விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டம் பெற்றுவிட்டு கணக்கெழுதும் குமாஸ்தா வேலையையே முதுமை வரையும்

செய்ய நேரலாம். உழைப்புக்கே அந்நியமாகும் இக் கொடுமை பற்றி மேலும் வளர்ந்த பின் கற்றுக்கொள்வாய்.

நீ ஓரளவு அதிர்ஷ்டக்காரியே. ஓரளவு வாய்ப்புள்ள குடும்பத்தில் பிறந்து விட்டாய். சயிக்கிளில் பள்ளிக்குச் செல்ல முடிகிறது. பசி, பட்டினியைப் பற்றி நீ அறிய மாட்டாய்.

எங்கள் கிராமத்து அரிசனக் குடும்பத்தில் நீ பிறந்திருந் தால் கல்வியே கற்க வாய்ப்பில்லாது மற்றைய கூலி விவ சாயப் பெண்களுடன் களை பிடுங்க, வெங்காயம் கிண்ட, மிளகாய் பழம் பறிக்க நீயும் சென்றிருப்பாய். ஆகவே எந்தத் தொழில் செய்பவர்களையும் பார்த்து இகழாதே. அவர்களது வர்க்க நிலையை ஆராய்ந்து அவர்கள் சமுதாயப் புரட்சியில் ஆற்றக்கூடிய பங்கை எண்ணிப்பார்.

ஒதுக்கப்பட்ட இவ்வர்க்கத்தவர்களே எதிர்கால உலகை ஆளப்போகிறார்கள். அவ்வேளை இன்று உழைக்காது சீரும், சிறப்புமாக பிறர் உழைப்பில் வாழ்பவர்கள் தாமும் உழைக்க நேரிடும். சொத்துள்ளவர்களால் சமூக நீதி, சமத்துவம் வழங்க முடியாது. சொத்து எதுவுமற்ற பாட்டாளிகளா லேயே சமத்துவத்தையும் சமூக நீதியையும் ஏற்படுத்த முடியும் இப்போராட்டத்தில் முன் குறிப்பிட்ட உதிரிப் பாட்டாளிகளுக்கும் ஒருபங்கு உண்டு என்பதை மறவாதே. அவர்களது நிலைகண்டு சமூக அமைப்பின்மேல் சீற்றம் கொள். அவர்கள் மேலல்ல.

அன்புள்ள,
அப்பா

# 15. அறிவு ஜீவிகள் - புத்தி ஜீவிகள்

அன்பிற்கினிய மானுக்கு,

எல்லாக் கடிதமும் படித்துப் புரிந்து கொண்டேன்: ஆனால், அப்பா உங்களை எந்த வர்க்கத்தில் சேர்ப்பது? என்று கேட்டு எழுதினுய், நல்ல கேள்வியே.

எமக்கு ஓர் அச்சகம் இருப்பது உண்மையே. நாம் உற்பத்திச் சாதனங்களைக் கொண்டுள்ளோம். தொழிலாளர்களின் உபரியை அபகரிக்கிறோம். ஆனுல் கொள்கையளவில் சமூக உடைமை, சமுக உற்பத்தியுள்ள சோஷலிச அமைப்புப் பற்றிப் பேசுகிருேம். இது சரியா? இதுவே உன் எழுத்தில் நளினமாகத் தொனிப்பதைக் கண்டேன். முன் எழுதிய கடிதங்களில் இந்நிலையை விளக்காதது என் தவறே.

உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட ஆளும் வர்க்கத்தவரோடு மேலும் பல அறிவு ஜீவிகளும் சேர்ந்தே வன்முறை கொண்ட அரசயந்திரத்தை இயக்குகின்றனர். இவர்களிடம் தனிச் சொத்தாக உற்பத்திச் சாதனங்கள் கிடையா. ஓரளவு அதிகாரம் மட்டும் பெற்றவர்கள். உயர்கல்விகற்ற அரசு அதிகாரிகள்; நிர்வாகத் திறமை கொண்ட மானேஜர்கள்; அக்கவுண்டன்மார், எஞ்சினியர்கள், டாக்டர்கள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ரேடியோ டி. வி. அதிகாரிகள், இராணுவ பொலிஸ் அதிகாரிகள், மதகுருமார், கல்லூரிப் பேராசிரியர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கலைஞர்கள் முதலானேர் இந்த அரசு யந்திரத்தைச் சார்ந்தவர்கள். பெரும்பாலும் இவர்கள் இயற்கை, பௌதிக விஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்றவர்களே.

அரசு இயற்றும் சட்டங்கள், பொலிஸ் இராணுவத்தின் அடக்குமுறைகள், நீதிமன்ற தீர்ப்புகள் யாவையும் அரசைச்

சார்ந்த இவ் அறிவு ஜீவிகள் நீதியானவை எனக் கூறி நியாயப் படுத்துவர்.

கல்விமான்கள், அறிஞர்கள், திறமைசாலிகள் எனக்கூறப் படும் இவர்களது கருத்துகளை அரசும் பிரச்சாரம் செய்கிறது. உற்பத்திச் சாதனங்களைக்கொண்ட முதலாளி வர்க்கம் தன் நலனுக்காக இயங்கும் அரசுடன் நிச்சயம் சார்ந்திருக்கும் என்பதை உனக்கு மீண்டும் விளக்க வேண்டியதில்லை. இவர்கள் சமுகத்தின் பிற்போக்காளர்கள்.

ஆயினும் முதலாளிகள், அறிவு ஜீவிகளைச் சேர்ந்த ஒரு பகுதியினர் அடக்கி ஒடுக்கப்படும் மக்களின் நலன் சார்ந்து நிற்பதைக் காணலாம்.சமுகத்தில் அனைவரும் கடவுளின்முன் சமம்; சமுகத்தில் அனைவருக்கும் சமநீதி, சமத்துவம், சம உரிமை வழங்கப்படவேண்டும் என மனிதாபிமானம் வேண்டுவோர், உழைக்கும் மக்களுக்கே உலகம், மனித உழைப்பை அபகரித்து ஒருசிலர் மட்டும் சுகமாக வாழும் முறை நிறுத்தப் படவேண்டும்; தனிச் சொத்துடமை ஒழிக்கப்படவேண்டும்; சுரண்டப்படும் வர்க்கங்கள் ஒன்று திரண்டு போராடி உற்பத்திச் சாதனங்களை சமுக உடைமை ஆக்க வேண்டும். இன்றைய சமுக அமைப்பை உடைத்து புதிய உலகம் ஆக்கப் படவேண்டும்; மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், மாவோ முதலியோர் காட்டிய மக்கள் ஜனநாயகம் கிட்டும் சோஷலிச கம்யூனிசப் பாதையில் சமுகம் வளர்ச்சியடைய வேண்டும் என உறுதியாக நம்புவோர்; அதற்காக முடிந்தவரை உதவுவோர், உழைப்போர் புரட்சியுணர்வுள்ள அறிவு ஜீவிகளாவர். இவர்களே சமுகத்தின் முற்போக்காளர்கள்; முன்னேடிகள்.

உலகப் பாட்டாளிகளின் புரட்சி பற்றி விஞ்ஞான பூர்வமான வரலாறு, உலகை மாற்றியமைக்கும் சித்தாந்தம் எழுதிய மார்க்ஸ், ஏங்கெல்ஸ்—இச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்திய லெனின், மாவோ, சேகுவேரா ஆகியோர் தொழிலாள வர்க்கத்தைச் சார்ந்தவர்களல்லர். சிந்தனையில் புரட்சிகொண்ட அறிவு ஜீவிகளே, மார்க்சுக்குத் துணையாக

இருந்து சித்தாந்தம் எழுதிய ஏங்கெல்ஸ் முதலாளி வர்க்கத்தைச் சார்ந்தவரே.

மார்க்சியம் என்பது ஒரு நடைமுறைச் சித்தாந்தமே· மார்க்சிஸ்டு என்று கூறுபவன் வெறும் சிந்தாத்தத்தில் மட்டும் கோட்பாடுகளை ஏற்பவனல்ல. நடைமுறையிலும் கைக்கொள்பவனாக இருக்க வேண்டும். ஆயினும் மார்க்சிஸ்டு என்று கூறிக்கொள்ளும் பெரும்பாலான அறிவு ஜீவிகள் நடைமுறையில் செயற்படாத போதும் சமூகப் புரட்சியை, எதிரிகளது பாட்டாளி வர்க்கப் போராட்டங்களை ஆதரிப்பவர்களாக, நீதிப்படுத்துவர்களாக இருப்பதைக் காணலாம். இவர்களது ஆதரவும் புரட்சிக்குப் பயன் படக்கூடியதே.

மார்க்சிஸ்டுகள் என்று கூறிக்கொள்ளும் அறிவு ஜீவிகளெல்லோரும் தமது சொத்துகளை முதலில் பொதுமையாக்கிக் காட்ட வேண்டும் எனக் கூறுவோரும் உளர். அறிவு ஜீவிகளெல்லோரும் பாட்டாளிகளாகிவிட வேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறே. அவர்கள் எதிர் புரட்சியாளர்களாக மாறாமல் இருப்பினே போதுமானதாகும்.

புரட்சிக் காலகட்டத்தில் இவ் அறிவு ஜீவிகளில், இன்று நடுநிலை வகிக்கும் பகுதியினர் புரட்சியாளருடன் சேர முன்வருவர். சோஷலிசப் புரட்சிக் காலகட்டத்தில் இவர்களது அறிவும் உழைப்பும் மிக அத்தியாவசியமாகும்.

ஆகவே சிந்தனையால் ஆளும் வர்க்கத்தைச் சார்ந்து நிற்பவரை பிற்போக்கான வர்க்கத்தவர் எனவும் சிந்தனையால் மார்க்சிய லெனினிச புரட்சிக் கோட்பாடுகளை ஏற்பவர்களை முற்போக்கான அறிவு ஜீவி வர்க்கத்தவர் எனவும் பிரித்து இனங்காணலாம்.

ஆகவே அப்பாவின் வர்க்கம் பற்றி மேலும் நான் விரித்துக் கூறவேண்டியதில்லை என நம்புகிறேன்.

அன்புடன்,

**அப்பா**

# 16. காலனி, அரைக்காலனி, நவகாலனி

அன்புக்கினிய மகளே,

அரைக்காலனி ஆதிக்கம் என்றால் என்னப்பா? என்று கேட்டு, எழுதியிருந்தாய். அதை விளக்குவதற்கு காலனி, அரைக்காலனி, நவகாலனி என்ற வார்த்தைகளையும் நான் விளக்கவேண்டும்.

காலனி ஆட்சி என்பது ஒரு நாடு தன் ஆயுத, இராணுவ பலத்துடன் மற்றோர் நாட்டைச் சுரண்டுவது; நேரடி அரசியல் ஆதிக்கத்தின்கீழ் பொருளாதாரச் சுரண்டலாகும். சுரண்டுவது என்பதிலும் பார்க்க நாட்டுவளத்தை, மக்களின் உழைப்பை அபகரிப்பது என்று கூறுவது நல்லது. இலங்கை, இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்தில் நான் பிறந்து வாழ்ந்தேன். அந்த ஆட்சியை நீ சரித்திர பாடத்திலேயே கற்றிருப்பாய்.

இந்தியாவில் ஒரு வைஷ்ராயும் இலங்கையில் ஒரு கவர்னரும் ஆங்கில ஆட்சியால் நியமிக்கப் பட்டிருந்தனர். அவர்களது ஆதிக்கத்திலேயே அரசு நிர்வாகம், சட்ட வாக்கம், நீதி வழங்கல், இராணுவம் பொலிஸ் இருந்தன, அவ்வேளை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப் பாடுகள் இங்கிலாந்துடன் இருக்கவில்லை. அதனால் எம் நாட்டு வளங்களையும், மக்கள் உழைப்பையும் விரும்பியபடி அவர்கள் அபகரித்துச் சென்றனர். எம் நாடுகளில் யந்திர உற்பத்தி வளர்ச்சியடைய வாய்ப்புகள் அளிக்கப்படவில்லை. இங்கிலாந்திலிருந்தே பண்டங்கள் யாவும் வந்து குவிந்தன. அவர்களது கம்பனிகளே உள் நாட்டிலும் ஆதிக்கம் பெற்றிருந்தன. ஏகாதிபத்திய காலகட்டம் ஏற்பட்டதால்

அவர்களது மூலதனம் ரெயில்வே, பஞ்சாலை. எலெக்டிக் தொழில்களிலும் இந்தியாவில் முடக்கப்பட்டன.

சுதந்திரப் போராட்டம் வலுத்ததாலும் இரண்டாவது உலக யுத்தப் பாதிப்பாலும் ஆங்கிலேயர் இந்தியா, இலங்கை போன்ற காலனிகளைக் கட்டிக்காக்க முடியா நிலையில் இந்தியாவிற்கு அரசியல் சுதந்திரம் வழங்கினர். இது மறைமுக அரசியல் ஆதிக்கத்தின்கீழ் பொருளாதாரச் சுரண்டலாகும். அவர்களது மூலதனம் அப்படியே உள் நாட்டில் இருந்தது. சுதந்திரத்தின் பின், பிற முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகளின் மூலதனங்களும் உள் நாட்டில் வரத்தொடங்கின. அதற்கு சட்டரீதியான அனுமதியும் கிடைத்தது.

இந்தியாவில் ஆங்கிலேய மூலதனத்துடன் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, பிரான்சு, கனடா, இத்தாலி, ஜப்பான் மூலதனங்களும் தனியாருடனான கூட்டுக் கம்பனி வழியாக வந்து ஆக்கிரமித்தன. அத்துடன் சோவியத் ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி ஆகிய சோஷலிச நாடுகள் என்று கூறப் படும் நாடுகளது மூலதனங்களும் அரச மூலதனத்துடன் இணைந்து கொண்டன.

இத்தகைய பல நாடுகளின் மூலதன ஆதிக்க நிலையையே அரைக்காலனி நிலை என்று கூறுவோம். இந்நிலை ஏற்படும் போது உள்நாட்டில் நிலப்பிரபுத்துவம் உடைவது தாமதப் படுத்தப்படுகிறது ஏனெனில் ஏகாதிபத்திய மூலதனங்கள் உள்நாட்டில் ஆட்சிபுரியும் வேளை தேசிய முதலாளிகள் உள்நாட்டில் வளர்வதை அவர்கள் விரும்ப மாட்டார்கள். அதனாலே உள்நாட்டில் அரை நிலப்பிரபுத்துவ நிலை அமைய நேரிடுகிறது.

நிலப்பிரபுத்துவத்தில் நிலத்தோடு அடிமைப் படுத்தப் பட்ட கூலி, ஏழை விவசாயிகள் கிராமத்தைவிட்டு வெளி யேறிப் பிழைக்கமுடியாது. இன்று அவர்கள் விரும்பியபடி நகரங்களுக்குச் செல்லவும் கூலி பேசுவதற்கும் ஓரளவு

வாய்ப்புப் பெற்றுள்ளனர். அதனாலேயே அரை நிலப்பிரபுத் துவம் என்று கூறுகிறோம்.

நவகாலனி நிலை என்பது ஓர் ஏகாதிபத்திய நாட்டின் பொருளாதார ஆதிக்கத்தில் நாடு பிணைக்கப்படுவதாகும். அதாவது ஏகாதிபத்தியங்களின் நேரடித் தளமாகப் பயன்படு வதாகும். அதனால் பிற நாடுகளின் மூலதனங்கள் அங்கு நுழையவில்லை என்று கூறமுடியாது. தலையாய ஒரு ஏகாதிபத்திய நாட்டின் பொருளாதார ஆதிக்கத்தில் பெரும் பாலும் அந்நாடு கட்டுண்டு கிடப்பதேயாகும்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளையே இதற்கு முதல் உதா ரணமாகக் கூறலாம். அமெரிக்க பொருளாதார ஆதிக்கத் தில் அந்நாடுகள் அடங்கிக் கிடக்கின்றன. அந்நாட்டு வரு மானம் ஆண்டுதோறும் அமெரிக்காவிற்கு வட்டி, தவணைப் பணம் செலுத்தவே போதாதநிலை. இதனால் மீண்டும் மீண்டும் தொடர்ந்து அமெரிக்காவில் கடன்பட்டு நாட்டைக் காப்பாற்ற நேரிடுகிறது. வட்டிக்குப் பணம் பெற்று, கடன் பெற்ற அதே நாட்டிற்கு பழைய கடனின் தவணைப் பணத் தையும் வட்டியையும் செலுத்துவதாகும்.

1977ன் பின்னரே இலங்கையும் அமெரிக்காவின் நவ காலனி யாகிவிட நேரிட்டது. எம் நாட்டின் டாலரின் மதிப்பு, வரவு செலவுத்திட்டம் ஆகியவற்றை அமெரிக்காவே இன்று தீர் மானிக்கிறது.

நேரடி இராணுவத் தலையீடு இன்றி பொருளாதாரத் தைக் கொண்டே நாடுகளை அடிமைப்படுத்தக் கூடிய புதிய வழிகளைப் பார்த்தாயா? இந்நிலை பயங்கர நிலை. பண் டங்களின் விலையேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், பொருளாதார தேக்கம் ஆகியவற்றிற்கெல்லாம் இந்நிலையே காரணமாகிறது. ஏழைகள் வட்டிக்குப் பணம் பெற்று பின் செட்டிக்குக் கட்டுப்படுவதுபோல நாட்டின் நிலையும் ஏற்படுகிறது.

இந் நவ காலனித்துவம் அமெரிக்காவின் தலைமையில் மூன்றாவது உலக நாடுகளை ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றன. இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் காலனி நாடுகளுக்கு அரசியல் சுதந்திரம் வழங்குவதை அமெரிக்கா வலியுறுத்தியது. ஆடு நனைகிறது என்று ஓநாய் வருந்திய கதை உனக்குத் தெரியுந்தானே. அதே போன்றே அமெரிக்காவின் அனுதாபம் இருந்தது

அரசியல் சுதந்திரம் வழங்கப்பட்ட நாடுகளுக்கு கடன் வழங்கி தன் நவகாலனியாக ஆக்குவதில் அமெரிக்கா வெற்றி பெற்று வருவதைக் காணலாம். இலங்கையும் இவ்வலையில் முற்றாக விழுந்துவிட்டது.

சர்வதேசக் கம்பெனிகள் இலங்கையின் உற்பத்தியை ஆக்கிரமித்துவிட்டன. இவை பெரும்பாலும் அமெரிக்கக் கம்பெனிகளே. உலக வங்கி பற்றி அறிந்திருப்பாய். அமெரிக்காவின் ஆதிக்கத்திலுள்ள வங்கியே இது. அபிவிருத்திக்கு உதவுவதாக வட்டிக்குக் கடன் வழங்கி அரசை தன் கையில் போட்டு விடுகிறது. மூன்றாவது உலக நாடுகளுக்கெல்லாம் கடனுதவி வழங்கி அந்நாடுகளை அமெரிக்கா தன் நவகாலனியாக ஆக்கி வருகிறது. அமெரிக்க டாலரே இன்று உலகில் ஆதிக்கம் பெற்ற நாணயமாகவும் நிலைத்துவிட்டது. சில கிழக்கு ஐரோப்பிய சோஷலிச நாடுகள் மட்டும் சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்தில் உள்ளன. நாடுகளுக்குக் கடன் வழங்கி ஆக்கிரமிப்பதில் அமெரிக்காவுடன் ரஷ்யாவால் போட்டிபோட முடியவில்லை

உன் அன்பான,

அப்பா

# 17. புதிய ஜனநாயகப் புரட்சி

அன்பு நிறைந்த மான்விழிக்கு,

ஏகாதிபத்திய மூலதனப் பிடியிலுள்ள எங்கள் நாடுகளுக்கு விடிவில்லையா என்று கேட்டிருந்தாய். விடிவு இருக்கிறது. இதே நிலையிலிருந்த சீனா விடுதலை பெற்றிருப்பதைக் கற்றிருப்பாய்.

இந்நிலை மாற பெரிய சமுதாய மாற்றம், புரட்சி அத்தியாவசியமாகிறது. அப்புரட்சியைப் புரட்சிகர வர்க்கங்களினாலேயே ஏற்படுத்த முடியும்.

இன்றைய சமுக அமைப்பிலுள்ள மக்கள் அனைவரையும் வர்க்கங்களாக, பல்வேறுவகை உற்பத்தியில் ஈடுபட்ட பெருங் குழுக்களாகப் பிரித்துக் காணும் முறைகளையே நான் விரித்துக் கூறினேன். இப்பிரிவுகளில், வர்க்கங்களில் புரட்சிகர வர்க்கங்களையும், எதிர்ப்புரட்சி வர்க்கங்களையும் நாம் பிரித்துக்கொள்ள வேண்டும்.

சோஷலிசப் புரட்சியென்பது முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த காலத்தில் மூலதனத்திற்கும் உழைப்பாளர்களுக்குமிடையில் ஏற்படும் முரண்பாட்டின் வெடிப்பாகும். பாட்டாளிகள் முதலாளிகளை வீழ்த்தி உற்பத்திச் சாதனங்களை சமுக உடமையாக்கி சமுக உற்பத்தியை ஏற்படுத்துவதாகும். உற்பத்தி ஏற்கனவே முதலாளித்துவ சமுதாயத்தில் சமுக உற்பத்தியாகி விட்டது. ஆனால் தொழிலாளரின் உபரி மதிப்பை தனியாரான முதலாளிகள் பறிமுதல் செய்து கொள்ளுகின்றனர். சோஷலிச சமுதாயத்தில் இம்முரண்பாடு தீர்க்கப்படுகிறது. 'பறிமுதல் செய்வோர் பறிமுதல் செய்யப் படுவர்' என மார்க்ஸ் கூறினார்.

இக்காலகட்டத்தில் ஒருபுறம் உற்பத்திச் சாதனங்களைக் கொண்ட முதலாளிகளும் மறுபுறம் உழைப்புச்

சக்தியை விற்று வாழும் பாட்டாளிகள் மட்டுமே யிருப்பர். இது முதலாளித்துவ சமூக அமைப்பான காலகட்டமாகும்.

ஆனால் இந்தியாவில் இன்று நிலவும் சமூக அமைப்பு அரைக்காலனி, அரைநிலப் பிரபுத்துவமாகும். இங்குள்ள சமூக வர்க்கங்களையெல்லாம் பிரித்துப் பார்த்துவிட்டோம். நாம் ஆராய்ந்த முறைப்படி புரட்சிகரமான வர்க்கங்கள். புதிய ஜனநாயகப் புரட்சிக்குத் துணை நிற்கக்கூடிய வர்க்கங்கள் வருமாறு.

**தலைமை வகிக்கும் வர்க்கங்கள்:**

நகர்ப்புறப் பாட்டாளிகள்
தொழிலாளர்கள்
கிராமப்புறப் பாட்டாளிகளான கூலி
ஏழை விவசாயிகள்

**அரவணைக்க வேண்டிய நேச சக்திகள் அல்லது அடிப் படைச் சக்திகள் :**

தேசிய முதலாளிகள்
பணக்கார விவசாயிகள்
அரைப்பாட்டாளியான வேலையற்றோர்
மாணவர்கள்

உதிரிப் பாட்டாளிகள்
தேய்ந்து வரும் சிறுபண்ட உற்பத்தியாளர்
தேய்ந்துவரும் நடுத்தர விவசாயிகள்.
அறிவு ஜீவிகள்.

**ஊசலாடும் வர்க்கங்கள்:**

சிறு பண்ட உற்பத்தியாளர்
நடுத்தர விவசாயிகள்
குட்டி முதலாளிகள்

வர்க்க எதிரிகள் :

தரகு முதலாளிகள்
நிலப்பிரபுக்கள்

தரகு முதலாளிகளின் ஆதிக்கம் குறைந்த பகுதிகள் கிராமப்புறங்களே. ஆகவே கிராமப் புறங்களிலேயே போராட்டம் ஆரம்பிக்கப்படவேண்டும். நகரங்களைச் சுற்றி வளைக்கும் போராட்டம் மூலமே வெற்றி பெற முடியும். கொரில்லாப் போராட்ட முறை மூலமே காலப்போக்கில் எதிரியை நேரடியாகச் சந்திக்கக்கூடிய படையைக் கட்டி எழுப்ப வேண்டும்.

கொரில்லாப் போர் முறை என்றால் என்ன? கொரில்லாப் போராளி என்றால் யார் என்று கேட்கிறாயா?

சுரண்டலினால் அல்லல்படும் மக்களின் பிரதிநிதியாக, புரட்சிகர அரசியற்கட்சியின் கீழ் இயங்கும் ஆயுதம் ஏந்திய போராளியே கொரில்லாப் போர் வீரனாவான்.

கொரில்லாப் போராட்டம் என்பது பலங்கொண்ட எதிரியை நேரடியாக முதலில் சந்திக்க முடியாத நிலையில், எதிர்பாராத வேளையில் எதிரியை எதிர்பாராத இடத்தில் வேகமாக, விரைவாகத் தாக்கிவிட்டு மறையும் போராட்ட முறையாகும்.

இப்போராட்டத்தை சீனத்தலைவர் பின்வருமாறு சுருக்கிக் கூறினார்:

எதிரி பலமாகத் தாக்கும் வேளை பின்வாங்கி, ஓய்வெடுக்கும் வேளை தொல்லை தந்து, முகாமிடும் வேளை தாக்கி, ஓட்டமெடுக்கும் வேளை துரத்தி அழித்தொழிப்பதாகும்.

இப்போர் முறையைப் பயன்படுத்தியே சீனத்தலைவர் அமெரிக்க ஏகாதிபத்தியச் சார்பான சியாங்கே ஷேக்கையும் யப்பானிய ஏகாதிபத்தியத்தையும் சீனாவிலிருந்து விரட்டியடித்தார் அங்கு புதிய ஜனநாயகப் புரட்சியை முடித்து

1949 ல் இருந்து சோஷலிசப் புரட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இன்று மத்திய அமெரிக்க நாடுகளான நிக்கராகுவா, எல்சல்வடோர் போன்ற நவகாலனிகளில் நடைபெறும் புரட்சி பற்றியும் நீ கற்க வேண்டும்.

ஆகவே இந்தியா போன்ற அரைக்காலனி அரை நிலப் பிரபுத்துவ நாடுகளுக்கும் நிட்சயம் விடிவு உண்டு. புதிய ஜன நாயகப் புரட்சியின் பின்னரே இந்திய வறுமையும் அறியா மையும் நீங்கி உலகில் உன்னத சோஷலிச நாடாக இந்தியா மலரும்.

இலங்கையும் ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து, நவகாலனி நிலையிலிருந்து விடுபட்டு சோஷலிசத்தை நாடும் காலம் வெகு தூரத்திலில்லை.

அங்கு நடைபெறும் போராட்டங்களைத் தானே நீ நேரில் பார்க்கிறாயே. புரட்சிக்கால கட்டத்தில் நீ வாழ் கிறாய் என்பதை மறந்து விடாதே.

கடிதங்களை ஓய்வுள்ள வேளை மீண்டும் படி. குந்த விக்குக் கடிதங்கள், குமரனுக்குக் கடிதங்களையும் மீண்டும் படி மேலும் தெளிவு பெறுவாய். பின்னர் மார்க்ஸ், லெனின், மாவோ முதலான பல அறிஞர்கள் எழுதிய நூல் களை படித்து எளிதில் புரிந்து கொள்வாய். இதன் மூலமே விஞ்ஞான பூர்வமாக சமுதாயத்தை அறிந்து கொள்ள முடியும். சிந்தனையில் தெளிவும் பெறுவாய். சமுகத்தை மாற்றி அமைக்கும் பணியிலும் ஈடுபட முடியும். என் வாழ்த்துகள்.

உன் அன்பான,

அப்பா.

★

# ஆசிரியரின் பிற நூல்கள்

### நாவல்கள்

புதிய சந்தையில்

இளமையின் கீதம்

அந்நிய மனிதர்கள்

வதையின் கதை

மண்ணும் மக்களும்

போர்க்கோலம்

தரையும் தாரகையும்

செவ்வானம்

சடங்கு

நீண்ட பயணம்

### சிறுகதைத் தொகுப்புகள்

கொடுமைகள் தாமே அழிவதில்லை

சங்கமம்

ஒரே இனம்

நல்லவன்

### கட்டுரைகள்

கலையும் சமுதாயமும்

குந்தவிக்குக் கடிதங்கள்

குமரனுக்குக் கடிதங்கள்

# மான்விழிக்குக் கடிதங்கள்

இன்று நாம் வர்க்க சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ் உண்மையைப் பெரும் பாலானோர் அறிவதில்லை; உணர்வதில்லை.

வர்க்க சமுதாயம் மக்களைப் பல்வேறு பெரிய குழுக்களாகப் பிரித்து வைத்துள்ளது. உற்பத்திச் சாதனங்களைக் கொண்டவர் பலதரம்: இரு கரங்களை மட்டும் கொண்டு உழைப்பவர் பலதரம். இச் சிறு நூல் இத்தகையவர்களை விஞ்ஞான அடிப்படையில் சமுக வர்க்கங்களாகத் தரம் பிரித்துப் பார்க்கிறது.

சமுக வர்க்கங்களை (Social classes) எவ்வாறு பகுப்பது என்பதைப் பள்ளிகளில், கல்லூரிகளில் தானும் கற்பிப்பதில்லை. சமுக வர்க்கங்கள் பற்றித் தமிழில் வெளிவரும் முதலாவது நூல் இதுவே.

வாழ்நிலையே சிந்தனையைத் தீர்மானிக்கிறது. ஆகவே உற்பத்தியில் ஏற்படும் உறவு, உழைப்பில் அவர்கட்குக் கிடைக்கும் பங்கு ஆகியவை அவரவர் சிந்தனையையும் தீர்மானிக்கிறது. சமுக வாழ்வு, அதை மாற்றி அமைப்பது பற்றிய போராட்ட குணாம்சங்களையும் வர்க்கங்களை முன் வைத்தே எளிதில் அறிய முடிகிறது.

பல்வேறு சமுக வர்க்கங்கள், அவற்றின் புரட்சிகர, எதிர்ப் புரட்சிகர குணாம்சங்களையும் இந்நூல் ஆராய்கிறது. எளிதில் இவற்றைக் கற்கக் கூடியதாக சிறு சிறு கடித முறையில் இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது.

பரதன் பதிப்பகம்
63, தையப்பன் தெரு,
சென்னை-600 001